R. No. M. …06 "PAHUTHARIVU"

உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு " ரூ. 5-0-0
தனிப்பிரதி விலை ஒரு அணா

பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்: ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-௵ ஐப்பசி-மீ …௳ (28—10—1934) | மலர் 10.

முதலாளிக் கொடுமையும், தொழிலாளி துயரமும்.

(சுயமரியாதைப்பாவலர் தோழர் தி. அ. வேங்கடசாமி பாடியது.)

"கண்ணபிரான் என்றுதித்த காசினியவதாரன்" என்ற மெட்டு.

1. ஏழைத்தொழி லாளிமக்கள்
என்றும்தொல்லைப் படுறார்—அவர்
எங்கெங்கும்சுற் றிடுறார்—ஐயோ
எத்தொழில்கள் செய்துமவர்
ஏதுமின்றிக் கெடுறார் (ஏழைத்)
பாழும்முத லாளிமார்கள்
பஞ்சணையின் மீது—சும்மா
படுத்துக்கொண்டு சூது—மிகப்
பண்ணியேபாட் டாளிபலன்
பறிக்கின்றாரோ யாது (ஏழைத்)

2. கல்மனத்தா ரால்வளைத்த
காடுகளை உழுறார்—கட்டி
கரம்புதட்டி விழுறார்—அய்யோ
காலமெல்லாம் உழைத்துழைத்துக்
கூலிபெறத் தொழுறார் (ஏழைத்)
நெல்லுநவ தான்யமுடை
நிரைநிரையாய் அடுக்கி—இன்பம்
நிழலில்இருந்த படிக்கித்—துய்த்து
நீசாபோடா வாடாஎன்று
பேசுறார்செல்வர் முடுக்கி (ஏழைத்)

3. மில்லுகளில் தொல்லைப்பட்டு
வேர்வைவடிக் கின்றார்—தங்கள்
பார்வைகெடு கின்றார்—செய்ய
வேண்டும்சிகிச் சைக்குதவி
யின்றித்தவிக் கின்றார் (ஏழைத்)
பொல்லாமுத லாளிமார்டெலி
போனில்பேசிக் கொண்டு—வீட்டைப்
பூட்டியுள்ளிருந் துண்டு—மேன்மேல்
போதைவர்க்கம் குடம்குடமாய்ப்
போடுகின்றார் மொண்டு (ஏழைத்)

4. உழைக்கும்மக்கள் இளைக்கும்பிணிக்
குண்டோமருந் தில்லை—இதில்
கண்டோம்பெருந் தொல்லை—அவர்
உடல்பீத்தல்பாய்க் கிடைகிடந்த
உயிர்விடுறார் *வல்லை (ஏழைத்)
பிழைக்கும்முத லாளிமார்க்குப்
பெருந்தீனியே தொல்லை—அவர்
பெண்களுக்கெல்லை யில்லை—அன்னார்
பின்புறமே காத்திருக்கும்
பெரும்டாக்டர்கள் கொள்ளை (ஏழைத்)

5 ஆகாயக்கப்பல்முதல் அமைப்போன்தொழிலாளி—
அழுவோனும்தொழி லாளி—அதின் [கட்டி
ஆதாயம் மட்டும்அறு
பவிப்பவன்முத லாளி (ஏழைத்)
வாகான மாடகூடம்
வகுப்போன்தொழி லாளி—அதில்
வசிப்பான்முத லாளி—ஓட்டை
மண்குடிலில் மழைகுளிரால்
வருந்துவான்தொழி லாளி (ஏழைத்)

6. குளங்கள்வெட்டிக் கிணறுவெட்டிக்
கொடுப்பான்தொழி லாளி—குளித்துக்
குடிப்பான்முத லாளி—அதில்
கொஞ்சநீரும் மொண்டிடக்கூ
டாதாம்தொழி லாளி (ஏழைத்)
பழம்தயிர்பால் நெய்வகைகள்
படைப்போன் தொழிலாளி—உள்ளே
அடைப்பான்முத லாளி—எட்டிப்
பார்க்கத்தொடக் கூடப்பயப்
படுகிறான்தொழி லாளி (ஏழைத்)

* வல்லை=சீக்கிரம்.

(தொடரும்)

விற்பனைக்காக நம்மிடம் ...ள

இதா பதிப்புப் புஸ்தகங்கள்

சிதம்பர ரகசியம்	0-8-0
சுதந்தரப்போர்	0-4-0
மாதர் சுதந்திரம்	0-8-0
விவாக விடுதலை	0-4-0
மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும்	?-0-0
மனித உற்பவம்	0-8-0
The Right of Temple Entry (English)	1-0-0
The Crux of the Indian Problem (English)	1-0-0
ஆஸ்தி... ...ஸ்திக சம்வாதம்	0-6-0
உழைப்பாளி...களுக்குஏன் இவ்வுலகமில்லை?	0-1-0
...ாமிகளின் அடிமை	0-12-0
லோகல்போர்டு ஆக்...(சென்னை)	2-0-0
பகுத்தறிவு கீதம்	0-1-0
நச்சுப்பொய்கை அல்லது ...ாரியர் வேட்கை	0-8-0

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவுக்கழக வெளியீடுகள்.

பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு
ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M. A.

இந் நூல் இங்கிலாந்து தேசத்திலுள்ள டர்ஹாம் நகரத்துப் பாதிரியார் ரெவரெண்ட் ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் எம். ஏ. அவர்கள் பிரமச்சரியம் என்னும் பெயரால் பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

இந்நூலில் மரணத்திற்குப் பிறகு ஜீவன் உண்டா? என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். இதில் பல அரிய ஆராய்ச்சியும், சிறந்த அபிப்பிராயங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணு 4

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், ஈரோடு.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக 3-ம் வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு 1 வருஷமாலை பைண்ட் செய்ததுகிரயம் ரூ. 3—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

"வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணு ஒன்று.
விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

"சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

"நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

தனியுடைமை உலகில் நடைபெறும்

பொருளாதாரக்கொடுமை

செல்வம் நிறைந்த ஐக்கியக் குடியரசு அமெரிக்காவிலுள்ள கொடிய வறுமை!

தானியம் நிறைந்து ஏராளமாக மீதப்படுகிற தேசத்தில் பசியால் வருந்தும் மக்கள்.

(கொளும்பு தோழர் I. M. இப்ருஹீம்)

பணக்காரன் ஆக வேண்டும் என்னும் ஆசையினால் லாபத்தை பிரதானமாகக்கருதி வாழ்ந்து வருகிற முறைக்கு "கேபிடலிசம்" அதாவது சுயநல முதலாளித்துவம் என்று சொல்லப்படும். (இந்த முறைக்கு நேர் விரோதமான முறை சோஷியலிசம் அல்லது சமதர்ம முறையாகும்) கேபிடலிசம் அல்லது தனிஉடைமைக்கொள்கை கொண்ட முதலாளித்துவ முறைப்படி பொருளாதாரம், அரசியல் முதலியவைகள் ஏற்பட்டு நடைபெற்று வருகிற தேசங்களில் ஐக்கியக்குடியரசு அமெரிக்காதான் செல்வத்தால் நிறைந்த தேசம் என்றும்—செல்வத்தாலேயே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தேசம் என்றும் சொல்லப்படுகின்றன. ஆகையால் சுயநலத்தனியுடைமைத் தன்மைகொண்ட முதலாளித்துவ முறையைப்பற்றிய வரலாற்றை நிரூபித்துக்காட்டுவதற்கு ஐக்கியக் குடியரசு அமெரிக்காவைத்தான் பிரதானமாக எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தியா, சைனா, ஜப்பான், இங்கிலாந்து, ஜர்மனி......முதலிய உலகத்திலுள்ள முதலாளித்துவ தேசங்களில் பெரிய பணக்கார முதலாளிகள் சிலர் பொது ஜனங்களின் செல்வத்தைச் சொந்தப்படுத்திக்கொண்டு சுயநலத்தை முன்னிட்டு மனம் போன போக்கில் உபயோகித்துக் கொண்டிருப்பது போன்று தான் ஐக்கியக் குடியரசு அமெரிக்காவிலும் பொது ஜனங்களின் செல்வத்தை முதலாளிகள் என்னும் [பூஷ்வாக்கள்]சீமான்கள் சிலர் சொந்தப்படுத்திக்கொண்டு சுயநலத்தை முன்னிட்டு மனம்போன போக்கில் உபயோகித்து வருகிறார்கள். பாங்கி, வர்த்தகம், வியாபாரம், விவசாயப் பண்ணை, தொழிற்சாலை, போக்குவரவு சாதனங்களாகிய ஸ்டீமர், ரயில், மோட்டார், ஆகாயவிமானம் ......முதலிய செல்வம் உற்பத்தியாகும் எல்லா மார்க்கங்களையும் முதலாளிகள் என்னும் ஒரு சில பேர்கள் தங்கள் வசமாக்கி அவர்களுடைய லாபத்தைப்பிரதானமாகக்கருதி வைத்து நடத்திவருகிறார்கள். ஐக்கியக்குடியரசு அமெரிக்காவில் முடியாட்சி ஒழிந்து "குடிஆட்சி" ஏற்பட்டு 200 வருடங்கள் ஆனாலும், அக்"குடியரசு" முதலாளித்துவ முறைப்படி ஏற்படுத்திக்கொண்டிருக்கும் "குடியரசு" என்னும் பெயருடைய முதலாளித்துவ ஆட்சியேயாகும். இந்தக்குடியாட்சிக்கும்முடியாட்சிக்கும் "முடியரசு குடியரசு" என்னும்சொல்லளவில்தான்வித்தியாசம் தெரிகிறதேயன்றி செயல் அளவில்இவைஇரண்டின் தன்மையும் ஒன்றே. அதாவது இரண்டும்தனியுடைமைக்கொள்கைகொண்டமுதலாளித்துவ அரசேயாகும்! இக்குடியரசு முறையை "குடியரசு" என்று சொல்வதற்கு பதிலாக முதலாளிக்குடிகளின் அரசுஎன்று சொல்வதுதான் நியாயப்படி பொருந்தும். (இந்திய தேசியவாதிகள் பிரிட்டிஷ் முடியாட்சியை ஒழித்து விட்டு ஏற்படுத்த பிரயத்தனப்படும் குடியாட்சி என்பதும், தனியுடைமைக்கொள்கைகொண்ட அமெரிக்கக்குடியரசுபோன்றது தான். எனவேஐக்கியக்குடியரசுஅமெரிக்கா மற்றைய முதலாளித்துவ தேசங்களைப்போன்ற முதலாளித்துவ முறைப்படி அமைத்திருக்கும் "குடியரசு" என்னும் பெயருடைய முதலாளித்துவ அரசேயாகும்.

மிகப்பயன்தரும் பூமி.

ஐக்கியக்குடியரசு அமெரிக்காவில் விவசாயத்திற்கு மிகப் பொருத்தமானதும், அதிகப்பலன் தரக்கூடியதுமான 29,73,576 மைல் விஸ்தீரணமுள்ள நிலமிருக்கின்றது! அங்கு ஜனத்தொகை 12-கோடிக்குமேல் உண்டு.

நிறைந்த செல்வத்துடன் கொடிய வறுமை!

அங்கு ஏராளமான செல்வத்திற்கு சொந்தக்காரர்களான கோடீஸ்வரர்கள் நூற்றுக்கணக்கானவர்களும், பத்து லட்சாதிபதிகள் ஆயிரக்கணக்கானவர்களும், ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான செல்வத்திற்கு சொந்தக்காரர்களான முதலாளிகள் லட்சக்கணக்கானவர்களும், முதலாளிகளுக்கு அடிமைப்பட்டு மாடுபோல் உழைத்து மிக நெருக்கடியானமுறையில் ஜீவிப்பதற்கு தகுந்த சிறு தொகை சம்பளம் பெறும் தொழிலாளிகள் லட்சக்கணக்கானவர்களும், கொடியவறுமையால் பீடிக்கப்பட்டு துன்புறும் நாட்டுப்புறத்தோர் கோடிக்கணக்கானவர்களும், நகரங்களில் வேலையில்லாமல் பட்டினியால் பரிதவிக்கும் தொழிலாளிகள் கோடிக்கணக்கானவர்களும் சேர்ந்துதான் இத்தேச ஜனத்தொகைக்குட்பட்டிருக்கின்றனர்!

பிரமாண்டமான செல்வத்திற்கு சொந்தக்காரர்களான குடும்பங்களில் ராக்பெல்லர் முதலாளியின் குடும்பத்திற்கு 20கோடிதங்கப்பவுன் பெறுமதியானசெல்வமிருக்கின்றது. வெண்டர் பில்ட் முதலாளியின் குடும்பத்திற்கு 8கோடி தங்கப்பவுன் பெறுமதியான செல்வமும், மெலன் முதலாளியின் குடும்பத்திற்கு 200கோடி தங்கப்பவுன் பெறுமதியான செல்வமும் இருக்கின்றன. ஹென்றி போர்ட் முதலாளிக்கு மாத்திரம் 40 கோடி தங்கப்பவுன் பெறுமதியுள்ள செல்வம் உண்டாம். மற்றப்படி ஒரு கோடி தங்கப்பவுன் பெறுமதியான செல்வமுள்ளவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். வில் ரோஜர்ஸ் என்னும் சினிமா நடிகருக்கு வாரத்திற்கு 1500பவுன் வீதமும், மோரிஸ் செவெலியருக்கு வாரத்திற்கு 1500பவுன்வீதமும், கொன்ஸ்டான் பெனட்டுக்கு வாரத்திற்கு 1400பவுன் வீதமும் சம்பளம் கொடுக்கப்படுகின்றனவாம். கிராடாகர்போ என்னும் சினிமா நடிகைக்கு வாரத்திற்கு 1800பவுன் வீதம் சம்பளம் கொடுக்கிறார்களாம். முன் ஒரு கதையில் நடிப்பதற்கு கிராடா கார்போ 50,000 பவுன் வாங்கிவந்தாளாம். சமீபத்தில் ஒரு கதையில் நடிப்பதற்கு 60,000 பவுன் வீதம் கொடுப்பதாக மெட்ரோ கோல்ட்வின் மேயர் சினிமா கம்பெனி முதலாளிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இத்துடன் தான் உணவிற்கு வகையில்லாமல் பசியால் பரிதவிக்கும் ஏழைகள் கோடிக்கணக்கானவர்களும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்படுவோர் ஒரு கோடியே இருபது லட்சம் பேருமிருக்கிறார்கள். இந்த ஏழை மக்களில் கோடிக்கணக்கானவர்களுக்குஉணவிற்கும், ஆடைக்கும், இருப்பிடத்திற்கும் வகையே இல்லை இவர்கள் தமது நண்பர்களின் சிறு உதவியாலும், பந்துக்களின் பிச்சையாலும் மடிந்து சவமாகி விடாமல் ஜீவித்து வருகிறார்கள்! முடி ஆட்சியுள்ள பிரிட்டனில் வேலையில்லாதோருக்குக் கிடைக்கும் உதவியளவாவது செல்வம் நிறைந்த குடி அரசு அமெரிக்காவிலுள்ள ஏழைகளுக்குக் கிடைப்பதில்லை!

ஒரு சில ஆண்களும், பெண்களும் தானாக பிரியப்பட்டு கஷ்ட நிவாரண நிதியென்று கொடுக்கும் பிச்சை ஒரு கோடியே இருபது லெட்சம் வேலையில்லாதோரின் கொடியவறுமையைப் போக்குவதற்கு ஒரு வீதத்திலும் போதியதல்ல. இந்தியா, சைனா, ஜப்பான், ஜர்மனி, பிரிட்டன் முதலிய தேசங்களில் வறுமையால் பீடிக்கப்பட்டு கஷ்டப்படும் மக்களின் நிலைமையை விட குடி அரசு அமெரிக்காவிலுள்ள ஏழைகளின் நிலைமை தான் பயங்கரமான நிலைமையிலிருக்கின்றன என்று அமெரிக்கர்களே சொல்லியுள்ளார்கள். எனினும் என்ன? ஐக்கியக் குடி அரசு அமெரிக்கா பொருளாதார நிபுணர்களாலும், அரசியல் நிபுணர்களாலும், விஞ்ஞான நிபுணர்களாலும், இயந்திர நிபுணர்களாலும், நவீன நாகரீகங்களாலும், சீர்திருத்த வாதிகளாலும், பொதுஜன சேவை செய்பவர்களாலும் நிறைந்த தேசம் என்றும், செல்வம் ஏராளமாய் நிறைந்து பொங்கி வழிந்தோடும் தேசம் என்றும் உலகமெங்கும் புகழப்படுகின்றன!

உலக சுபாவமா?

மற்றைய தேசங்களைவிட குடி அரசு அமெரிக்காவில் செல்வம் தேவைக்கு மேல் ஏராளமாக நிறைந்திருக்கிறதென்பது உண்மை. அத்தேசத்திலுள்ள 12 கோடி ஜனங்களுக்கும் சுகமாக ஜீவிப்பதற்கு வேண்டிய செல்வத்தை அங்கேயே உண்டுபண்ணப் படுகின்றன!! அதுமாத்திரமல்ல அத் தேசத்திலுள்ள 12 கோடி ஜனங்களின் தேவையை பூர்த்தி பண்ணுவதற்கு செலவாகிய செல்வம் போக, "அந்நிய நாடுகளுக்கு" விற்பனை செய்வதற்கு வேண்டிய அளவு ஏராளமான செல்வம் மீதமிருக்கின்றன!!! சத்தியம் இப்படி யென்றால் இவ்வளவு செல்வம் நிறைந்த தேசத்தில் இத் துணை பெரிய கொடிய வறுமை ஏற்படுவதற்குக்காரணம்என்ன? அநீதமான தனியுடைமைக் கொள்கை கொண்ட முதலாளித்துவ முறைப்படி பொருளாதாரம், அரசியல், தேச நிர்வாகம், சட்டதிட்டம், சமூகப் பழக்க வழக்கம் ஏற்பட்டிருப்பது தான் காரணம்! இன்னும் அமெரிக்கா கிறிஸ்தவ மதத்தால் நிரம்பிய தேசமாகையால் "பணக்காரத் தன்மையுடன் ஏழ்மையும் இருக்கவேணும், அந்தப் படி இருப்பதுதான் கடவுள் படைத்த இந்த உலகத்தின் சுபாவம். ஆகையால்இதைமாற்ற முடியாது" என்று சொல்லும் கிறிஸ்தவ மதம் முதலிய "தெய்வத் தன்மை பொருந்திய" தெய்வத்தால் அருளப்பட்ட மதங்கள்" வாயிலாய் போதிக்கப்படுகின்றன.

ஆகவே இவை மத போதனைப்படி "மாற்றமுடியாதஉலகசுபாவம்" ஆகும். இத்தகைய மதபோதனையில்மூழ்கி அபின் தின்றவர்கள் போல் மயங்கி "சுவர்க்க லோகத்தை" பற்றி கனவு காணும் ஏழை மக்கள் (இம் மத போதனையால்) ஆறுதலைப் பெற்றுக்கொள்கிறார்கள்! அதாவது மத நம்பிக்கையால் ஏழை மக்கள் ஏமாற்றமடைகிறார்கள் என்பது தான். இத்தியாதி காரணங்களால் அமெரி

க்க பணக்கார முதலாளிகள் ஏழைகளால் ஒரு வித கஷ்டமும், தொல்லேயும் எதிர்ப்பும் ஏற்படாமல் தலே நிமிர்ந்து செல்வத்தில் புரண்டு வாழ்ந்து வருகிருர்கள்.

விவசாயத்தால் விளேயும் செல்வம்

ஐக்கியக் குடியரசு அமெரிக்காவில் (தண்ணீரால் மூடப்பட்டிருக்கும் பாகங்கள் போக) இருக்கும் பூமியின் விஸ்தீரணம் 190,32,90,880 மைலாகும். இதில் தானியம் பயிர் செய்வதற்கும், மற்றைய பயிர்த்தொழில்களுக்கும், ஆடு, மாடு, கோழி முதலியவைகள் வளர்ப்பதற்கும் ஒழுங்கு படுத்தியிருக்கும் நிலத்தின் அளவு 95, 58, 83, 715ஏக்கராகும்! இங்கு வருஷத்திற்கு விவசாயத்தால் மாத்திரம் விளேயும் விளேபொருளின் பொருமானம் 2142,56,23,614 (இரண்டாயிரத்து நூற்றி நாற்பத்திரண்டு கோடியே ஐம்பத்தாறு லட்சத்திருபத்து மூவாயிரத்து அறுநூற்றுப்பதினான்கு) டாலராகும்!! விவசாயத்தால் மாத்திரம் வருடா வருடம் கிடைக்கும் இவ்வளவு பணத்தை (செல்வத்தை)யும் அமெரிக்காவிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் (ஆண், பெண், குழந்தைகள் எல்லோருக்கும்) சமமாகப் பிரித்துக் கொடுத்தால் ஒருவனுக்கு 178½ டாலர் வீதம் கிடைக்கும்! இத் தொகை 178½ டாலர் இந்தியா, இலங்கை பணத்தில் 535½ ரூபாயாகும். இந்தவீதத் தொகை ஒரு ஆளுக்கு ஒரு வருஷ விவசாயவிளேச்சலாக கிடைக்கும் பாகமாகும். ஒவ்வொரு வருடமும் இந்தப்படியும், இதற்கு மேலும் விளேகின்றன. தனியுடைமைக் கொள்கைகொண்ட முதலாளித்துவ முறைப்படி ஆட்சி செய்யப்பட்டு வருகிற ஐக்கியக் குடியரசு அமெரிக்காவில் விவசாயத்தால் மாத்திரம் விளேயும் இவ்வளவு செல்வமும் நிலச்சுவான்தார்கள் என்னும் பெரிய பணக்காரமுதலாளிகளில் சிலரிடத்தில் போய்ச்சேர்ந்து விடுகின்றன.

விவசாயப் பண்ணேகள்

இத் தேசத்தில் சிறியதும், பெரியதுமான விவசாயப் பண்ணைகள் 64,48,343 இருக்கின்றன! முதலாளிகளுக்குச் சொந்தமான 50 ஆயிரம் ஏக்கருக்குக் குறையாத பெரிய பண்ணேகளேயும், ஏழை குடியானவர்களுக்குச் சொந்தமான ஒரு ஏக்கருக்கும் குறைவான சிறிய பண்ணேகளேயும் சேர்த்து மேற்படி தொகையாகும்! விவசாயிகளுக்கு 50 ஏக்கர் பண்ணேகள் முதற்கொண்டு இருக்கிறதாக வைத்துக்கொண்டு கணக்கெடுத்தாலும் கூட தானே உழுது வேலே செய்து தானியத்தை உண்டுபண்ணும் விவசாயிகளுக்குச் சொந்தமான பண்ணேகள மொத்தம் 38,68,332 ஏக்கர் தான்! வேலே செய்யும் விவசாயிகளுக்குச் சொந்தமான இத்தொகை போக பாக்கியிருக்கும் 25,80011 ஏக்கர் பண்ணேயும் வேலே செய்யாத முதலாளிகளுக்கு (நிலச்சுவான்களுக்கு)ச் சொந்தமான ஆள்1க்கு 1000 ஏக்கர்முதற்கொண்டு 50,000 ஏக்கர் வரையிலுமுள்ள் பண்ணேகளாகும்!! பண்ணேகள் உள்ள விவசாயிகளாகவோ, அல்லது முதலாளிகளுக்குச் சொந்தமான பண்ணேகளில் கூலிக்கு வேலே செய்கிற விவசாயிகளாகவோ பார்த்தால் அதற்குட்பட்ட ஜனங்கள் 2,78,92,000 பேர்களாகும். பண்ணேகளில் கஷ்டப்பட்டு வேலே செய்து செல்வத்தை உண்டுபண்ணுகிறவர்கள் இவர்கள்தான் ஆனல் அவர்களுக்கு (உண்டுபண்ணிய உழைப்பாளிகளுக்கு) கிடைப்பது விவசாய விளேச்சலால் பெறப்படும் முதலில் மிகச்சிறு பாகம் மாத்திரம்தான்! இதற்குக்காரணம் முதலாளிகள் (நிலச்சுவான்கள்) பண்ணேகளுக்குச் சொந்தக்காரர்களாய் இருப்பதுதான்! ஆகையால் இவர்கள் (பண்ணேகளுக்குச் சொந்தக்கார முதலாளிகள்) விளேச்சலே விற்பனே செய்து அதில் கிடைப்பதில் பெரும்பாகத்தை இந்நிலச்சுவான்கள் எடுத்துக்கொண்டு மிகச்சிறுபாகத்தை உண்டுபண்ணிய உழைப்பாளிகளுக்குக் கூலியாகக் கொடுக்கிருர்கள்!

ஏராளமாகக் குவிந்திருக்கும் தானியங்களே முதலாளிகள் லாபத்தை முன்னிட்டு செய்யும் அக்கிரமம்!

ஐக்கியக் குடி அரசு அமெரிக்காவில் தற்போது தான்யங்கள் பயிரிடும் நிலத்தின் விஸ்தீரணம் 22,03,64,000 ஏக்கராகும்! இதில் முக்கியமாக பயிர் செய்யப்படுவது "கோர்ன்", "ஓட்ஸ்", சோளம் முதலிய தானியங்களாகும். "ரய்" "பார்லி" "பக்விட்ப்லெக்ஸீட்" செல் என்னும் தானியங்களும் பயிர் செய்யப்படுகின்றன. இன்னும் ஏராளமான கிழங்கு வகைகளும் உண்டு பண்ணப்படுகின்றன. இத்தானிய சாகுபடியில் வருடத்திற்குக் கிடைக்கும் விளேச்சல் 550,60,24,000 புஷலாகும்! இவ்வளவு ஏராளமான விளேச்சல் விளேந்தும் இத்தேச ஜனங்களில் 1,20,00000பேர் உணவில்லாமல் கஷ்டப்படுகிருர்கள்! இத்தானியங்களுக்கு சொந்தக்காரர்கள் பெரிய பணக்கார முதலாளிகள் சிலரே! ஒரு புஷல் தானியத்தின் விலேஇவ்வளவு என்று முதலாளிகள் தீர்மானித்திருக்கிருர்கள். முதலாளிகள் தீர்மானித்துக் கொண்டிருக்கும் விலேக்கு அல்லது அதற்கு மேற்பட்ட விலேக்கு தானியங்களே விற்க முடியாவிட்டால் தானியங்களே அழித்து நாசப்படுத்தி விடுவதல்லாமல் குறைந்த விலேக்கு விற்கவாவது, உணவில்லாமல் பரிதவித்துக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு இலவசமாகக்கொடுக்கவாவது மாட்டார்கள்! இலவசமாக ஏழைகளுக்குக் கொடுப்பது அல்லது குறைந்த விலேக்கு விற்பனே செய்வது முதலாளித்துவ வர்த்தக முறைக்குப் பொருத்தமற்றசெய்கை யெனச்சொல்கிருர்கள்! முதலாளிகள் லாபத்தை பிரதானமாகக் கருதி ஏற்படுத்திக் கொண்டிருக்கும் வர்த்தகத் திட்டப்படி ஸ்டாக் பண்ணுவதையும், அழித்து நாசப்படுத்துவதையும் தடுப்பதற்கு யாருக்கும் எந்தவிதமான உரிமையும் முதலாளித்துவ சட்டப்படி இல்லே! சென்ற வருடத்தில் தானியங்களின் விலே மிகக் குறைந்திருந்ததனல் தான்யத்திற்கு சொந்தக்காரர்களான முதலாளிகள் தானியங்களே அம்பாரங்களில் நிறைத்து ஸ்டாக் பண்ணி வைத்திருந்தார்கள்! சில பகுதிகளில் தானியத்துக்குச் சொந்தக்கார முதலாளிகள் இலட்சக் கணக்கான புஷல் தானியங்களே தீ வைத்துக்கொளுத்தி அழித்து நாசப்படுத்திஞர்கள்! இங்கு கோடான கோடிமக்கள் உணவில்லாமல் கதறியதை தானியங்களே தீ வைத்து அழித்து நாசப்படுத்திய முதலாளிகள் கவனிக்கவில்லே! ஏழைமக்கள் உணவில்லாமல் கதறுவதற்கும், முதலாளிகள் வர்த்தக முறைப்படி ஸ்டாக் பண்ணுவதற்கும்—தீவைத்து அழித்து நாசப்படுத்துவதற்கும் முதலாளித்துவ சட்டப்படி சம்பந்தமில்லே! தீ வைத்துக் கொளுத்தி நாசப்படுத்திய லட்சக் கணக்கான புஷல் தான்யங்களே பட்டினியால் மடியும் பலகோடி மக்களுக்கும் பங்கிட்டுக்கொடுத்தால் என்ன என்று யாருக்கும் கேட்பதற்கு முதலாளித்துவ சட்டத்தில் இடமில்லே! அவைகள் முதலாளிகளுக்குச் சொந்தமானதினல் சொந்தக்கார பிரபுக்கள் குறைந்த விலேக்கு விற்க இஷ்டமில்லாமல் தீ வைத்து அழித்து நாசப்படுத்தியிருக்கிருர்கள்! சைனுவில் அநந்தங்கோடி மக்கள் பஞ்சத்தால் துன்புறுகிருர்கள், இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் பரிதவிக்கிருர்கள். ஐரோப்பாவில் பலகோடிப்பேர் வறுமையின் கொடுமை தாங்கமுடியாமல் கதறுகிருர்கள், அமெரிக்காவில் ஒரு கோடியே இருபது லட்சம் ஏழைகள் உணவு கேட்டு கூச்சலிடுகிருர்கள் ஆனல் அமெரிக்க தேசத்து முதலாளிகளுடைய தானியம் நிறைந்திருக்கும் அம்பாரங்களின் கதவுகளே திறக்கின்ருர்கள் இல்லே! இதுதான் தனியுடைமைக்கொள்கை கொண்ட சுயநல முதலாளித்துவத்தின் தன்மை. இதில் பகுத்தறிவை பிரயோகித்து நீதியை சொல்லுகிறவர்களே சட்ட விரோதமான பொதுவுடைமைக்காரர்கள் என்று அரசாங்கம் தண்டித்தும், மதஸ்தர்கள் கடவுள் ஏற்படுத்தியிருக்கும் தன்மைக்கு விரோதமாக பேசும் நாஸ்திகர்கள் என்று தூற்றியும், துன்புறுத்தியும் வருகிருர்கள்!

கெலிபோனியா பழவர்க்கங்கள்.

ஐக்கியக் குடி அரசு அமெரிக்காவிலேயே மிகச்செழிப்பான பிரதேசமாகிய கெலிபோனியா பழவர்க்கங்கள் ஏராளமாக விளேவதில் பிரதானமான தேசமாகும். இங்கு பிரதானமான பழவர்க்கங்கள் ஏராளமாக உண்டு பண்ணப்படுகின்றன. பழவர்க்கங்கள் விலேகுறைந்து விட்டதனல் சென்ற வருடத்தில் பழவர்க்கங்களின் விளேவை (அவைகளுக்கு சொந்தக்கார முதலாளிகள்) அழித்து நாசப்படுத்திஞர்களாம்! விளேச்சலே அழித்து நாசப்படுத்தியது மாத்திரமல்ல சில பழவர்க்க தோட்டங்களேயும் அடியுடன் அழித்து நாசப்படுத்தி விட்டார்களாம்!! "பீச்" என்னும் பழம் மிக ருசியானதும், மனிதனே போஷிக்கத்தகுந்தசத்துள்ளதுமான ஒருவித பழவர்க்கமாகும். இந்தப் பழவர்க்கம் ("பீச்")விலே குறைந்து விட்டதை முன்னிட்டு (சொந்தக்காரமுதலாளிகள்) பீச் மரங்களே தூரோடு பிடுங்கிப்போட்டார்கள். 1933ம் வருஷத்தில் 6மாதத்தில் மட்டும் இந்தப் படி பிடுங்கிய "பீச்" மரங்களின்தொகை ஆறுலட்சம் என்று சொல்லப்படுகின்றன. இதேபோல் திராட்சைப் பழத்தின் விலேகுறைந்து விட்டதை முன்னிட்டு (திராட்சை தோட்டக்கார முதலாளிகள்) நான்குலட்சம் டன் திராட்சைப்பழங்களே அழுகிப் போகும்படி விட்டு விட்டார்கள்!

பருத்திச்சாகுபடி.

ஐக்கியக் குடிஅரசு அமெரிக்காவில் பருத்திபயிர் செய்யும் பூமியின் விஸ்தீரணம் 4,70,87,000 ஏக்காரகும். பருத்திச்சாகுபடியால் வருடத்திற்குக்கிடைக்கும்பஞ்சு1,79,70,000 பேலாகும் மார்கட்விலேயுடன் ஒப்பிட்டுப்பார்த்ததில் பருத்தியின் விலே குறைந்திருந்ததாம். இப்பருத்தித்தோட்டங்களுக்குச் சொந்தக்காரர்கள் பெருத்த முதலாளிகள் ஆகையால் குறைந்த விலேக்கு பருத்தியை விற்பனேசெய்யமுதலாளிகளுக்கு இஷ்டமில்லே. காரணம் லாபம் கொஞ்சம் என்பதனல் தான். "அதிகலாபம் கிடைத்தால் விற்கிறது இல்லாவிட்டால் விற்கிறதில்லே" என்று சென்ற வருடத்தியபருத்திவிளேச்சலே ஸ்டோரில் போட்டு ஸ்டாக் பண்ணி வைத்தார்கள். இந்தவருடத்தில் பருத்திச் சாகுபடியை பாதியளவுதான் செய்யவேண்டும் என்றுபருத்தித்தோட்ட முதலாளிகள் தீர்மானித்துக் கொண்டார்கள். பருத்திச் சாகுபடியை பாதியளவுக்குக் குறைத்துக் கொண்டால் இன்னும் பல லட்சம் பேருக்கு வேலேயில்லாமல்போய்விடுமே என்பதைப்பற்றி முதலாளிகளுக்குக்கவலேயில்லே. முதலாளிகளுக்குவேண்டிய துலாபம்தான். லாபத்தைக்கருதியே முதலாளிகள் அவைகளேவைத்துநடத்து கிருர்களே யன்றி தொழிலாளிகளுக்கு வேலே கொடுக்க வேண்டும் என்பதை கருதியல்ல. ஆகையால் முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வேலேயில்லாமல் போய்விடுமே என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியதில்லே! பருத்திச்சாகுபடியை குறைத்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

அகில ரஷிய நூலாசிரியர் மகாநாடு.

நூலாசிரியர்களுக்கு ரஷிய மக்களின் வேண்டுகோள்.

(C. R. D.)

அகில ரஷிய நூலாசிரியர்கள் மகாநாடு ஒன்று சில மாதங்களுக்கு முன் மாஸ்கோ நகரில் நடைபெற்றது. அம்மகாநாட்டிற்கு சோவியத் யூனியனுக்குட்பட்ட எல்லா பாகங்கலிருந்தும் நூலாசிரியர்கள் சென்றனர். அதோடு பிற தேசங்களில் உள்ள கீர்த்திவாய்ந்த நூலாசிரியர்களும் அந்த மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அதன்படியே பல தேசத்து நூலாசிரியர்களும் சென்றனர். இங்கிலாந்து தேசத்திலிருந்து தோழர் ஆம்பல் வில்லியம்ஸ்-எல்லிஸ் என்கிற ஓர் பிரபல நூலாசிரியை மகாநாட்டின் அழைப்பிற்கிணங்கிச் சென்று மகாநாட்டு நடவடிக்கைகளைக் கண்டு ஊர் திரும்பினார். மகாநாட்டில் அவர் நேரில் கண்ட காட்சிகள் அவருக்கு அளவு கடந்த ஆச்சரியத்தையும், மன வெழுச்சியையும், ஆர்வத்தையுமுண்டாக்கி விட்டதென்பதை அவர் கூறும் விபரங்களிலிருந்தே அறியலாம்.

"அந்த நூலாசிரிய மகாநாடு ஒரு சாதாரண மகாநாடல்ல. ஜனக் கூட்டமோ சொல்ல முடியாது. எள் விழவும் இடமில்லை. புகழும் செல்வாக்கும் பெற்ற பல ரஷிய நூலாசிரியர்களே மகாநாட்டுப் பந்தலுக்குள் தங்களுக்கு இடம் பெறக்கூடுமானவரை முயற்சித்தும் முடியாமற் போய் விட்டதைப் பார்த்த போது எனக்கு இடம் கிடைத்தது என்னுடைய பாக்கியம் என்றே உணர்ந்தேன். மகாநாடு கூடுமிடம் வெகு அழகாக கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது, மகாநாட்டில் மட்டுமல்ல மகாநாட்டுப் பந்தலுக்கு வெளியேயும், சுற்றியுமுள்ள பல தெருக்களிலேயும் ஒரே ஜனத்திரள், கணக்கிலடங்காது. மகாநாட்டுப் பந்தலுக்குள் இடம் கிடைக்கப் பெறாத ஜனங்கள் தெருக்களில் நின்று கொண்டு "நாம் மகாநாட்டுக்குள் போக முடியாவிட்டாலும் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருக்கும் நூலாசிரியர்களையாவது அவர்கள் இவ் வழியாகச் செல்லும்போது தரிசிக்கலாம்" என்கிற எண்ணத்தோடு நின்று கொண்டிருந்தனர்.

இங்கிலாந்தில் உள்ள நூலாசிரியர்களாகிய நமக்கு நம்முடைய வாசகர்கள் என்ன விரும்புகிறார்கள் என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஆனால் ரஷிய நூலாசிரியர்களுக்கோ அப்படியல்ல. வாசகர்களின் தேவைகள் யாவை யென்பது அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது.

பலதிறப்பட்ட தொழிலாளர் பொதுமக்கள் தங்கள் தங்களின் சார்பாக டெலிகேட்டுகளைத் தெரிந்தெடுத்து தங்கள் தேவைகளை நூலாசிரியர்களுக்குத் தெரிவிப்பதற்காக அவர்களை மகாநாட்டுக்கு அனுப்பி வைத்தனர். உதாரணமாக: சுரங்கத்தொழிலாளர், வியவசாயிகள், சிப்பாய்கள், கப்பல் தொழிலாளர் ஆக இதுபோன்ற பல தொழிலாளரின் சார்பாக தனித் தனி டெலிகேட்டுகள் அனுப்பப்பட்டிருந்தனர். அது மட்டுமல்ல, பனிரண்டு முதல் பதினாறு வயதுக்குட்பட்ட சிறு பாலர்களைக் கொண்ட "பயனீர்ஸ்" என்ற படையின் சார்பாகவும் மகாநாட்டுக்கு டெலிகேட்டுகள் வந்திருந்தனர். (அங்குள்ள "பயனீர்ஸ்" படையை இங்குள்ள சாரணப்படை (Scout)க்குச் சற்று ஏறக்குறைய ஒப்பிடலாம்] அந்த பயனீர்ஸ் டெலிகேட்டுகளில் ஒருவரான பதினான்கு வயதும் பூரணமடையாதவோர் இளம் பெண் அம் மகாநாட்டில் அருமையான சொற்பொழிவாற்றினார். அதன் பிறகு அந்த இளைஞர்கள் ஏக தொனியில் அங்கு விஜயம் செய்துள்ள நூலாசிரியர்களைப் பார்த்து "நூலாசிரியர்களே! கவனியுங்கள். கிழக்கு சைபீரியாவைப் பற்றியும், அங்கே நாங்கள் செய்யும் வேலையைப்பற்றியும், எங்கள் வாழ்க்கையைப் பற்றியும் நீங்கள் சரிவர எழுதுவதே கிடையாது. எங்கள் வாழ்க்கை அங்கே எவ்வளவு ருசிகரமாய் இருக்கிறதுதெரியுமா"? என்று அவர்களுக்கு அறிவித்தனர்.

செம்படையினரின் புகார்

பிறகு செம்படைப் பிரதிநிதிகள் மேடைக்கு வந்து "நீங்கள் எங்களைப் பற்றி வேண்டிய அளவுக்கு எழுதுவதே கிடையாது. நாங்கள் எவ்வளவு உணர்ச்சியாகவும், எவ்வளவு சிரத்தையோடும் வேலை செய்கிறோம் என்பது உங்களுக்குத் தெரிந்தால் அல்லவோ! இப்போதிருக்கும் பாட்டுகள் எங்களுக்குப் போதாது. இன்னும் அதிகமான பாட்டுகள் எங்களுக்குத் தேவை" என்று புகார் செய்தனர்.

பிறகு ரயில்வேலைக்காரரின் பிரதிநிதிகள் ஒருவர்பின்னொருவராக ரயில் வண்டியைப்போல் கைகளில் கார்ட் கொடிகளையும், பிகில்களையும் ஏந்தி மேடைக்குப் பிரயாணமானார்கள். பிரதிநிதித் தலைவர் ஓர் பிரசங்கம் செய்தார். அப் பிரசங்கத்தைமற்றப்பிரதிநிதிகள் ரயில்வண்டியைப்போல்பாவித்து பிரசங்கத்தின் இடை இடையில் கொடிகளை வீசியதும் பிரசங்கத்தின் முடிவில் பிகில்களை ஊதியதும் வேடிக்கையாயிருந்தது.

அதன் பிறகு விவசாயிகளின் பிரதிநிதி வந்து தங்களைப் பற்றியும், தங்களின் வேலையைப்பற்றியும், முக்கியமாக கிராமாந்திர வாழ்க்கையைப் பற்றியும் அதிக கவனம் செலுத்தும்படி நூலாசிரியர்களைக் கேட்டுக்கொண்டு அமர்ந்தார்.

அடுத்தபடியாக விவசாயி உடையணிந்த ஒருவர் எழுந்தார். அவர் தன்னுடன் காய்கறிப் பதார்த்தங்களைக்கொண்டு வந்தார். அது எதற்கு என்று ஆச்சரியப்பட்டேன். பிறகு அவர் மகாநாட்டு மேடைமீது அமர்ந்திருந்தவர்களுக்குப் பதார்த்தங்களை வழங்கி உபசரித்தார். அங்கிருந்த பெண்களில் ஒருவர் கையில் ஒரு சிறிய மூட்டையுடன் எழுந்தார். அதில் அரக்கு இருந்தது. மேடையில் மகாநாட்டுத் தலைவர் இருக்குமிடத்திற்குச் சென்றார். மகாநாட்டுத் தலைவர் மேக்ஸிம் கார்க்கியிடம் அந்த மூட்டையைக்கொடுத்து "இந்த அரக்கைக்கடிதாசிகளாக்கி அதன்மேல் ஓர் அழகிய நாடகமொன்றை எழுதித் தாரும்" என்றார். இவற்றையெல்லாம் விட மிக வேடிக்கையும், அழகும் மிகுந்த சம்பவம் என்னவென்றால் மற்றொரு "பயனீர்ஸ்" படையின் பிரதிநிதிகள் தங்கள் தேகம் முழுவதும் பலவித வர்ணப் புஷ்பங்களால் அலங்கரித்துக்கொண்டு கரங்களிலும் பல நிறப் புஷ்பங்களைத் தாங்கி மேடைக்கு வந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிறு செய்யுளை ஒப்பித்தனர். பிறகு எல்லோரும் சேர்ந்து ஒரு பாட்டுப் பாடினார்கள். பாடி முடிந்தவுடன் தங்கள் கைகளிலிருந்த பூக்களைச் சபையோர் மேல் சொரிந்தனர். நூலாசிரியர்களுக்கு இவர்கள் கொடுத்த விண்ணப்பம் என்னவென்றால் "நாங்கள் செய்யும் வேலைகளைப்பற்றி எழுதியிருக்கும் புத்தகங்களையே நாங்கள் விரும்புகிறோம். எங்களைப்பற்றி நூல் இயற்ற உங்களுக்கு சமாச்சாரங்கள் தேவையல்லவா? இதோ பாருங்கள்! நாங்களே அந்தச் சமாச்சாரம். நீங்கள் எழுத வேண்டிய விஷயம் எங்களைப் பற்றியே. எங்கள் வாழ்க்கையின் உண்மைச் சம்பவங்களையே நீங்கள் எழுத வேண்டும். அதில் சாரமற்றவைகளைப் பன்னிப் பன்னி எழுதுவதை நாங்கள் வெறுக்கிறோம்" என்று கேட்டுக் கொண்டனர்.

சாந்தியும், அறிவும் மிளிரும் ஒரு நந்தவனத்தில் (Park of Rest and culture) ஒரு பெரிய காட்சி நடந்தது. அந்த நந்தவனத்திற்கு பிரபல நூலாசிரியர்கள் ஊர்வலமாகச் சென்றனர். அந்த ஊர்வலத்தின் முன்னால் வாத்தியக்காரர்கள் பெரிய பேண்ட் வாத்தியங்களைத் தாங்கி வாசித்துச் சென்றனர். ஊர்வலம் செல்லும் தெருக்களின் இருபுறங்களிலும் ஜனங்கள் தங்களை (Comicmasks) வேடிக்கை முகமூடிகளால் அலங்கரித்துக் கொண்டு வரிசை வரிசையாய் நின்றிருந்தனர். அப்படி நின்றிருந்தவரில் ஒரு ஆணும் பெண்ணும் விவசாயிபோல் உடுத்திக் கொண்டு, அருவருப்பான முகமூடிகளால் தங்கள் முகத்தை மறைத்திருந்தனர். அதோடு கையில் ஒரு நீண்ட கொடியும் இருந்தது. அந்தக் கொடியில் "நீங்கள் விவசாயிகளாகிய எங்களைப் பற்றி எழுதும்போது, தயவு செய்து இப்போது நாங்கள் காணப்படுவது போல் விகாரமாக எழுதாதீர்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.

'பயனீர்ஸ் படையைச் சார்ந்த சில சிறுவர்கள் பச்சிளங் குழந்தைகளின் முகத்தைப் போன்ற முகமூடிகளை அணிந்திருந்தனர். அந்த முகத்தின் உதடுகள் கோவைக்கனிபோல் சிவந்தும், கண்கள் அகன்றும் வானத்தை நோக்குவது போலவும் இருந்தன. அவர்கள் கையில் ஏந்தி நின்ற கொடியில் "நாங்கள் உண்மையில் இவ்விதம் இல்லை" என்ற சொற்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

மேக்ஸிம் கார்க்கி.

மகாநாட்டுத்தலைவர் மேக்ஸிம் கார்க்கி என்பவரின்மேல் எனக்கு அளவு கடந்த பிரியமேற்பட்டது. அவர் மிகவும் சுறுசுறுப்புள்ள கிழவர்.

கிழவராய் இருந்த போதிலும் அந்தச் சமயத்தில் அவர் ஓர் 'சிங்கம்' போலவே தோற்றினார். அவருடைய நீலக்கண்களின் விழிகள் எப்படிப் பிரகாசித்துக் கொண்டிருந்தன தெரியுமா? நட்சத்திரங்கள்போல்மின்னிக் கொண்டே இருந்தன. அவர் குழந்தைகளிடம் அதிக அன்பைக் காட்டினார். அவர்கள் விஷயத்தில் அதிக கவனமும் செலுத்தினார். குழந்தைகளிடமிருந்து அநேக கடிதங்கள் அவருக்கு வந்தன. கிழக்கு சைபீரியாவிலிருந்துவந்த 'பயனீர்ஸ்' படையினர் தங்களாலேயே எழுதப்பட்ட சிறு சிறு புத்தகங்கள் சேர்ந்த ஒரு பெரிய புத்தகக்கட்டை தலைவருக்குக் கொடுத்தனர். தலைவர் அப்புத்தகங்களில் அடங்கியுள்ள விஷயங்களைப் பரிசீலனை செய்து பார்த்து அதில் காணப்படும் சில குறைகளை எடுத்துச்சொல்லி அவைகளை நீக்கும் முறையையும் குறிப்பிட்டார்.

பிறகு, நான் மார்ஷாக் என்பவ

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

தேர்தல் பிரசார போக்கு.

தோழர் சத்தியமூர்த்தி பொய் புகார்களுக்கு தோழர் ஈ. வெ. ராமசாமி தலைமையில் தோழர் ஏ, ராமசாமி முதலியார் பதில்.

5000 பேர் கொண்ட மாபெரும் கூட்டம்.

16 விளக்குகள்.

சனிக்கிழமை (20-10-34) மாலை சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்று கூடியது. மண்டபத்தில் எள்விழ இடமில்லாமல் ஜனங்கள் நிறைந்திருந்தனர். இடம் போதாமல் மண்டபத்திற்கு வெளியிலும் நூற்றுக்கணக்கானவர்கள் நிற்கும்படி நேரிட்டதால், மகாஜனங்களின் கோரிக்கைக்கிணங்க, ஷை கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கூட்டத்தைக் கூட்டினார்கள். தோழா சத்தியமூர்த்தியைப் புகழ்ந்தும் திவான்பகதூர். ஏ. ராமசாமி முதலியாரை இகழ்ந்தும் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியாரும், ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டியாரும் வெளியிட்டிருந்த துண்டுப்பிரசுரத்திற்கு பதில் கூறுவதற்காகவே ஷை கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். தம் மீது காட்டியுள்ள பல புகார்களுக்கும் திவான்பகதூர் முதலியார் ஒவ்வொன்றாக தகுந்த ஆதாரங்களுடன் பதில் கூறினார். 'காங்கிரஸ் புரட்டுகளும், வஞ்சகமும்' என்பதே அவர் பேசிய விஷயமாகும்.

தோழர் ஈ. வெ. ரா. பிரசங்கம்.

தலைமை வகித்த தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் முடிவுரையாகப் பேசியதாவது:—தேர்தலில் போட்டி அபேட்சகர்கள் ஒருவரை யொருவர் இகழ்வதும், எதிர் அபேட்சகர் மீது வாக்காளர்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும்படி செய்வதும் உலகம் முழுதும் சகஜமாகிவிட்டது. ஆனால் அவ்விதம் செய்வதற்கும் ஓர் எல்லையுண்டு இப்போது சென்னை நகர் சம்பந்தப்பட்ட வரையில், காங்கிரஸ் பெயரைக் கூறிக்கொண்டு பிரசாரம் செய்து வருகிறார்கள். 'அபேட்சகராக நிற்கும் ஆளை கவனிக்காதீர்கள். மகாத்மா காந்திக்காக ஓட்டுப்போடுங்கள்' எனக் கூறுகிறார்கள். இது நாமம் போட்ட சோம்பேரிகள் திருப்பதி வெங்கிடாசலபதிக்கு உண்டியல் பிச்சை கேட்பது போலாகும். ஆனால் நான் அவ்விதம் எதுவும் கூற விரும்பவில்லை. சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் பார்ப்பனர்—அல்லாதார் ஜாதியை ஆதாரமாகக் கொண்டே தேர்தல் இயக்கம் நடந்து வருகிறது. நீங்களெல்லோரும் சென்னை நகரத்திற்கு அபேட்சகராக நிற்கும் தோழர் ராமசாமி முதலியாரின் அந்தஸ்தையும், யோக்கியதாம்சங்களையும் தோழர் சத்தியமூர்த்தி யோக்கியதாம்சத்தையுமே கவனிக்கவேண்டும். அபேட்சகர்களில் யார் செய்வது சரி, யார் செய்வது தப்பு என்பதைப் பகுத்தறிந்து, உங்களிஷ்டம்போல் ஒருவருக்கு ஓட்டுப் போடும் உரிமை உங்களுக்கு உண்டு. எனவே, வீண் புரட்டுகளைக் கேட்டு நீங்கள் ஏமாறமாட்டீர்களென்பது நிச்சயம். காங்கிரஸ் பெயரால் நடந்து வரும் பிரசாரத்தை நீங்கள் கவனிக்கக் கூடாது. காங்கிரஸ் அரசியலில் இன்னும் சிறிது காலத்தில் மிகுந்த மாறுதலேற்படலாம். ஏனெனில் காந்தியார் காங்கிரசிலிருந்து விலகிவிட உத்தேசித்துள்ளார். அப்படியிருந்தும் காங்கிரஸ் வாதிகள் தேர்தலுக்காக மகாத்மா பெயரை உபயோகித்து வருகிறார்கள். தோழர் சத்தியமூர்த்திக்கு 4000 பிராமணரின் ஓட்டுகள் நிச்சயமாக இருக்கிறதென்றும்- அதற்குமேல் தான் அவர் இப்போது கணக்கிட வேண்டுமென்றும் அவருடைய நண்பர்கள் கூறுகின்றனர். அப்படியாயின், தோழர் ராமசாமி முதலியாருக்கு 11,000 பிராமணரல்லாதாரின் ஓட்டுகள் நிச்சயமாக இருக்கின்றனவென்று நீங்கள் தைரியமாகக் கூற வேண்டும். இப்போது நடைபெற்று வரும் தேர்தல் பிரசாரத்தில் தோழர் சத்தியமூர்த்தி, தோழர் முதலியாருக்கு விரோதமாக பல பொய்யான விஷயங்களைக் கூறியிருக்கிறார். அவைகளால் பொதுஜன அபிப்பிராயம் மாறக்கூடுமோவென்றே, இப்போது தோழர் முதலியார் அவைகளுக்கு பதில் கூறவேண்டியிருக்கிறது.

'பொய்ப்பிரசாரம்' தோழர் ராமசாமி முதலியார் பதில்.

அடுத்தபடியாக திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியார் பேசியதாவது:- சிலநாட்களாக சென்னையில் என்மீது கடுமையான துவேஷப்பிரசாரம் நடந்து வருகிறது. வாய்ப்பேச்சளவில் மாத்திரம் அத்தகைய பொய்ப்பிரசாரம் நடந்து வரவில்லை. சாசுவதமான துண்டுப்பிரசுரங்களின் மூலமாகவும் அத்தகைய பிரசாரம் நடந்து வருகிறது. அத்தகைய பொய்ப்பிரசாரத்தால் பொது ஜனங்களுடைய மனதில் மிகுந்த தப்பெண்ணம் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. சென்னை, ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகள் என்மீது "குற்றப்பத்திரிகை" யொன்றைத் தயாரித்து அவைகளை அச்சடித்து விநியோகம் செய்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன் சென்னை கார்ப்பரேஷனுக்கு நான் தலைவராக இருந்தபோது, அச்சபையில் என்னை தோழர் சத்தியமூர்த்தி முதலியோர் பேசவிடாதது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அப்போது எனது நிலைமையை விளக்கிக் கூறுவதற்காக இதே இடத்தில் கூட்டம் கூடினோம். அப்போது எனது தோழர் சத்தியமூர்த்தி 'கோழை' 'கழுதை' 'மடையன்' என்றெல்லாம் கூறினார். (வெட்கம்! வெட்கம்!!) பின்னர் அவர் அவ்விதம் கூறியது தவறென மன்னிப்புக்கேட்டுக்கொண்டார். இப்போதும் தோழர் சத்தியமூர்த்தி என்மீது வசைமொழிப்பிரயோகமும், பொய்ப்பிரசாரமும்செய்ய ஆரம்பித்திருக்கிறார். அவருடைய பிரசாரமானது சிறிதும் கண்ணியமற்றதாகவும், பார்லிமெண்டு முறைக்கும் விரோதமானதாகவும் இருக்கிறது. ஆனால் அவ்விதம் கண்ணியமற்ற முறையில் எதுவும் பேசக்கூடாதென நான் எனது சகாக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களும் எனது வேண்டுகோளுக்கிணங்க நடந்து வருவதைக்குறித்து நான் அவர்களுக்கு வந்தனமளிக்கிறேன்.

பெரும் புரட்டு.

நிற்க, என்மீது தயாரித்துள்ள "குற்றப்பத்திரிகை"யைப்பற்றி கவனிப்போம். என்மீது பல புகார்களைக் கூறி வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில், நான் இந்திய சட்டசபையில் அடக்கு முறையைக்கண்டித்து ஒருபோதும் பேசவில்லையென்பது முதல் குற்றமாகும். ஷை புகார் பெரும் புளுகு. 1931ம் வருஷம் பிப்ரவரிமாதக்கடைசியில் நான் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தேன். அவ்வருஷம் மார்ச்சு மாதம் 7ந்தேதி காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. எனவே அடக்கு முறையை ஆதரித்தோ, அல்லது எதிர்த்தோ இந்தியசட்டசபையில் பேசுவதென்ற விஷயமே எழஇடமில்லை. ஆனால் காந்தி-இர்வின் ஒப்பந்தமேற்படும் விஷயமாக சர். தேஜ்பகதூர் சாப்ருவுடன் நானும் என்னாலியன்றதைச் செய்தேனென நான் தைரியமாகக் கூறமுடியும். பின்னர் அவ்வருஷம் முடிய சட்டமறுப்பு இயக்கமே இல்லை. நான் 1932ம் வருஷம் ஜனவரி மாதக்கடைசி வாரத்தில் தான் இந்திய சட்டசபைக்குச் சென்றேன். அவ்வருஷம் பிப்ரவரிமாதம்மகாத்மா மீண்டும்சிறைப்பட்டார். அவர்சிறைப்பட்ட இரண்டு வாரங்களுக்குள், சர்க்காரின் அவசரச்சட்டங்களை எதிர்த்து ஹரிசிங்கவர் ஓர் தீர்மானம் கொண்டுவந்தார். அத்தீர்மானம்கொண்டுவர முக்கிய காரணஸ்தர்களாக இருந்தவர்களில் நானும் ஒருவன். அப்போது நான் சர்க்கார் அடக்குமுறையைக் கண்டித்து மிகவும் கடுமையாகப் பேசியிருக்கிறேன். (இச்சந்தர்ப்பத்தில் தோழர் முதலியார், தாம் அச்சமயம் இந்தியா சட்டசபையில் செய்த பிரசங்கத்திலிருந்து சில வாக்கியங்களை வாசித்தார்.) பின்னர் அவ்வருஷம் மார்ச்சு ௴ 30ந் தேதி இந்தியா சட்டசபையில் வங்காள கிரிமினல் திருத்த சட்டதைக் கொண்டு வந்த போது, சர்க்கார் கொள்கையை நான் கடுமையாகக் கண்டித்துப்பேசியிருப்பதுடன், அச்சட்டத்திற்கு விரோதமாகவும் ஓட்டுக் கொடுத்தேன். தோழர் சத்தியமூர்த்தி தாம் சிறையில் மிகவும் கஷ்டப்பட்டதாகக் கூறுகிறார். சிறையில் 'ஏ' வகுப்பிலிருந்தது என்ன கஷ்டம்? உண்மையில் கஷ்டப்பட்டவர்கள் சிறைப்பட்ட சாதாரண தொண்டர்களேயன்றி, 'ஏ' வகுப்பில் சௌக்கியமாக இருந்த தோழர் சத்தியமூர்த்தி போன்றவர்களல்ல. சகல அரசியல் கைதிகளையும் 'ஏ' வகுப்பிலேயே வைக்க வேண்டுமென நான் அப்போது இந்திய சர்க்காரை வற்புறுத்தினேன். ஆனால் காங்கிரஸ் வாதிகளுக்கு நன்றியென்பதே கிடையாது. தவிர நான் காங்கிரசுக்காக பயந்து கொண்டு நான் அரசியல் கைதிகளுக்கு சலுகையாகப் பேசவில்லை. அது எனது கடமையென்றே நான் அவ்விதம் அரசியல் கைதிகளுக்கு பரிந்து கூறினேன். தண்டனை காலத்திற்கு முன் தோழர் சத்தியமூர்த்தி விடுதலையடைந்ததற்கும் நான் காரணமெனக்கூறுவது மிகையாகாது.

சர்க்கார் அறிக்கையை ஆதரித்தேனா?

நான் இந்தியா சட்டசபையில் வெள்ளை அறிக்கையை வானமளாவப்புகழ்ந்து ஆதரித்தேனென்பது என் மீது கூறப்பட்டுள்ள இரண்டாவது புகாராகும். 1933-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31ந் தேதி நான் இந்தியா சட்டசபையில் வெள்ளை அறிக்கையைப் புகழ்ந்து பேசியதுடன், அதிலுள்ள பாதுகாப்புகளை ஆதரித்ததாகவும், சர்க்கார் அறிக்கை விஷயமாக எனது நிலைமை சந்தேகாஸ்பதமாக இருக்கிறதென்றும் அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள் இது பச்சைப் புளுகாகும். நான் இந்தியா சட்டசபையில் வெள்ளை அறிக்கையை மிகவும் பலமாகக்கண்டித்திருக்கிறேன். அத்தகைய அதிக பாதுகாப்புகள் கவர்னரிடமிருப்பது மோசமானதென்றும் நான் திட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இன்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க,

தூத்துக்குடி நாகம்மாள் வாசகசாலை,

அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம்

தோழர் பெரியசாமி அவர்களின் வெற்றி.

மேற்படி வாசகசாலையின் அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் 21-10-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு தோழர் எஸ். ஒ. வெற்றிவேல் அவர்களின் தலைமையில் வாசகசாலை நிலையத்தில் நடைபெற்றது. அங்கத்தினர்களும், முக்கியஸ்தர்களுமாக சுமார் 60, 70 பேர் வரை விஜயம் செய்திருந்தனர்.

தலைவர் முன்னுரையாகக்கூட்டத்தின் நோக்கத்தை கூறியதும் தோழர் எம். வைகுண்டம் அவர்கள் இவ் வாசகசாலையின் தலைவரும், போஷகருமான தோழர் கூ. கா. ஆ. பெரியசாமி அவர்கள் நகர முனிசிபல் 23 நம்பர் வார்டு தேர்தலில் முதன்மையாய் வெற்றி பெற்றமைக்கு அன்னாரைப் பாராட்டுவதாக ஓர் தீர்மானத்தைப் பிரேபித்துப் பேசியதின் சுருக்கமாவது:—

தோழர்களே! தோழர் பெரியசாமி அவர்கள் 23 நிம்பர் வார்டு தேர்தலில் வெற்றியடைந்தது சுயமரியாதை இயக்கத்துக்கு ஓர் பெரும் வெற்றியாகும். ஏனென்றால் இவருக்கு எதிரியாய் நின்ற தோழரைப் பற்றி உங்களுக்குத் தெரியும் அவர் இந் நகர் காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கத்தோலிக்க கிறிஸ்தவர், பெரும் ஆஸ்திகர், சுயமரியாதை இயக்கத்தையே அடியோடு கிள்ளிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டி திரிபவர்களில் முக்கியஸ்தர், இந்த வார்டின் பிரதிநிதியாக பல தடவை தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டவர். அப்படிப்பட்டவர் நம்மிடம் தோல்வி பெற்றது நமது இயக்கத்துக்கு பெரும் வெற்றி யென்று சொல்லுவது மிகையாகாது.

தேர்தலில் தோழர் பெரியசாமி அவர்களை நாஸ்திகனென்றும், காந்தி பேரில் நம்பிக்கை இல்லை யென்று தீர்மானம் செய்தவரென்றும், இவருக்கு வாக்காளர்கள் தக்க பாடம் கற்பிக்க வேண்டுமென்றும் பல துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்தன. பலரால் விஷமப் பிரசாரங்களும் பயமுறுத்தல்களும் செய்யப்பட்டன. செல்வாக்குள்ள சில கத்தோலிக்கர்களும், பாதிரிகளும் தோழர் பெரியசாமி அவர்களை கவுன்சிலுக்கு வரவிடாதபடி தீவிர பிரசாரம் செய்தார்கள். இவ்வளவு பயமுறுத்தல்களுக்கும், விஷமங்களுக்கும் நமது தலைவர் அஞ்சவில்லை. 26-9-34ல் தேர்தல் நடைபெற்றதை. திரியாய் நின்ற தோழர் மாசில்லாமணி பிள்ளைக்கு வெகு சொற்ப ஓட்டுகள் கிடைத்தது. தோல்வியடைந்தார். நமது தோழருக்கு அதிகப்படியான ஓட்டுகள் கிடைத்து முதன்மையாக வெற்றி பெற்றார். இந்த வார்டில் காங்கிரசை ஆதரிப்பவர்களும், கத்தோலிக்கர்களும் தான் அநேகமாக ஓட்டர்களாயிருக்கிறார்கள். இதில் நமது தோழர் வெற்றிபெற்றதானது ஆஸ்திகமும், நாஸ்திகமும், காங்கிரசும், சுயமரியாதையும் என்பவைகளின் பாகுபாடுகளை பொதுஜனங்களுக்கு விளக்கிக் காட்டுவதாயிருக்கிறது. இங்கு காங்கிரஸ் அபேக்ஷகர் எல்லாரும் தோல்வியடைந்ததிலிருந்தே காங்கிரஸ்காரர்களின் யோக்கியதையை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். வாக்காளர்களும் அதன் யோக்கியதையை தெரிந்துகொண்டார்களென்று தான் சொல்ல வேண்டும். இந்த வார்டின் வாக்காளர்கள் தன் மதிப்புடன் நடந்து நமது தலைவருக்கு ஓட் செய்ததற்கு அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

தோழர் பெரியசாமி அவர்கள் சிறு வயதினராயிருந்த போதிலும் பொது மக்களுக்குப் பணியாற்ற அதிக விருப்பம் கொண்டவர். பல பொது ஸ்தாபனங்களில் அங்கம் வகித்து அரிய சேவைகள் செய்து வருகின்றார். எவ்வளவோ எதிர்ப்பு இருந்தும் இயக்கத்தை ஆதரித்து வருகிறார். சமதர்மத்தில் மிகவும் பற்றுடையவர் எந்த பொது ஸ்தாபனங்களுக்கும் இல்லையென்று சொல்லாமல் தன்னாலியன்ற அளவுக்கும் அப்போதைக் கப்போது உதவி செய்து ஆதரித்து வருகிறார். ஒருவர் குறை கூறும்படி இதுவரையும் அவர் நடந்ததில்லை அவரைப் பற்றி சுருக்கமாக கூறுமிடத்து நமது நகரசபை தலைமைப் பதவிக்கு முற்றிலும் பொருத்தமுள்ளவரென்றே சொல்ல வேண்டும் அதுவும் கிடைக்குமென்பது எனது நம்பிக்கை 65000, ஜனத்தொகை கொண்ட நமது நகருக்கு வாசகசாலை இல்லாக் குறையை நிவர்த்திக்க தனது சொந்தப் பொறுப்பில் அதிக பணச்செலவில் இந்த வாசகசாலையை இலவசமாய் நிறுவி யிருப்பதிலிருந்தே இவரின் தயாள குணத்தை நாம் அறியலாம். சில பள்ளி மாணவர்களுக்கும் உபகார சம்பளங்கள் கொடுத்து ஆதரித்து வருகிறார். இப்பேர்ப்பட்ட பரோபகாரியும், வாலிப உணர்ச்சியுமுள்ள தலைவர் நகரசபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டது நமது வெற்றியை காட்டுகின்றது. இவரைப் பின்பற்றி தெரிந்தெடுக்கப்பட்ட மற்ற பிரதிநிதிகளும் நடப்பார்களானால் நமது நகரசபை அதிக சிறப்படையுமென்பதில் சந்தேகமில்லை. இந்த தீர்மானத்தை நீங்கள் எல்லாரும் ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்று பேசி முடித்தார்.

தீர்மானத்தை ஆதரித்து சாயர்புரம் "சகோதரன்" பத்திரிகையின் ஆசிரியர் தோழர் வி. எம். ராஜமணி அவர்கள் தோழர் பெரியசாமி அவர்களின் வெற்றியைப் பாராட்டிப் பேசியதுடன் அங்கத்தினர்கள் யாபேரும் முன்னின்று தீவிரமாய் வேலை செய்து நமது இயக்கத்தை பரவச் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினர். பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இரவு 9-30மணிக்குக் கூட்டம் கலைந்தது.

தீர்மானங்கள்

1. நமது வாசகசாலைத்தலைவரும், போஷகருமான தோழர் கூ. கா. ஆ. பெரியசாமி அவர்கள் நகர முனிசிபல் 23 நெம்பர் வார்டு தேர்தலில் முதன்மையாக தெரிந்தெடுக்கப்பட்டதற்கு அன்னவரை இக் கூட்டம் மனமாரப் பாராட்டுகின்றது.

அவர் வெற்றிக்கு ஊக்கம் கொடுத்து வேலை செய்த தோழர்களுக்கு இக் கூட்டம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

(2) வாசகசாலை முதல் வருட பூர்த்திவிழாவை வரும் நவம்பர் 15ம் தேதிக்குள்நடத்துவதற்குக்கீழ்கண்டவர்களை வரவேற்பு கமிட்டி அங்கத்தினர்களாக ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டது. அவர்களின் பெயர் தோழர்கள் எஸ். ஒ வெற்றிவேல், வி. வி. தனிக்கோடி பி. எ., எ. ஆர். எஸ். அருணாசலம், எஸ். எ. நடராஜன், பி. எஸ். ஷண்முகம், எம். வைகுண்டம், எம். பி. நடராஜன், வி. எம். சுப்பையா, எல். மாடசாமி, எஸ். வி. அருணாசலம், பி. சாமுவேல், எ. மொறாய்ஸ்

(3) வாசகசாலைக்கு மின்சார விளக்கு கட்டிடத்தின் சொந்தக்காரர் தோழர் மா. வே. மா. அன்பிரதர்ஸ், சுந்தரவேல் அவர்களை விளக்குப் போட்டுத்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

(4) வாசகசாலை குமஸ்தா சம்பளத்தில் மாதம் 1-க்கு ரூபாய் ஒன்று கூடுதலாகக் கொடுப்பதென்று. தீர்

காந்தியார் பயணம்.

தோழர் காந்தியார் காங்கிரசிலிருந்து முடிவான பயணம் சொல்லிக்கொள்ள ஆரம்பித்துவிட்டார். "விஷயாலோசனைக் கமிட்டியும், காங்கிரஸ் சபையும் என்னுடைய மூன்று சீர்திருத்தங்களையும் ஒப்புக்கொண்ட போதிலும் கூட நான் காங்கிரசிலிருந்து விலகிவிடுவது நிச்சயம்" என்று பம்பாய் காங்கிரஸ் விஷயாலோசனைக்கமிட்டியில் தெரிவித்துப் பயணம் சொல்லிக்கொண்டார்.

அ. பி. சுருக்கம்.

காங்கிரஸ் சேதிகள் சரிவர வெளியாகவில்லை,

காங்கிரசில் நடந்த நடவடிக்கைகளும், அங்கு நடந்த பேச்சுகளும் தோழர் காந்தியுடன் மற்றவர்கள் நடத்திய சம்பாஷணைகளும், கேள்விகளும், பதில்களும் சரியானபடி பிரசுரமாகவில்லை. அங்கிருந்தே விஷயங்களை ஒரு கூட்டத்தாரால் தங்களுக்கு அனுகூலமாகவே வடிகட்டித் திருத்தி அனுப்பப்படுவது ஒருபுறமிருக்க அதுவும் இங்கு பார்ப்பனப்பத்திரிகைகளால் சிலது மறைத்தும், திருத்தியும் தான் பிரசுரிக்கப்படுகின்றது. ஆதலால் என்ன நடந்தது என்கின்ற உண்மையைப் பொருத்து அறியவேண்டியிருக்கிறது.

"ஒன்ஸ் மோர்"

(யானைவெடி)

ஓஹோ! என்ன யானைவெடி? நீயே "ஒன்ஸ் மோர்" போட்டுக்கொள்கிருயே என்று என்னைக்கேட்காதீர்கள். கட்டுரைத் தலைப்பைப் படித்தவுடனேயே உங்களிடமிருந்து கிளம்பிய சப்தம் தானே! அது. ஆகையால் என்மீது கோபம் வேண்டாம் தோழர்களே! அதுகிடக்கட்டும்' உலகத்தைச் சுற்றிப் பாருங்கள். சுற்றிப்பார்க்க இஷ்டமில்லாவிட்டால் நினைத்தாவது பாருங்கள். குடியரசோ அல்லது முடியரசோ உள்ள எந்தநாட்டிலாறுலும்சரி. இந்தமாதிரிகாலத்துக்கும், அறிவுக்கும் ஒவ்வாதஒருபொய்க்கதையை நம்பி, தேவைக்கு மிஞ்சின ஆடம்பரங்களும், ஆகாரங்களும், அதனுலுண்டாகும் பொருள் விரயமும்' உடல் நலக்கேடுகளும் உண்டா? ஏற்படுத்திக் கொள்ளுகிருர்களா? அந்தப்படி ஒரு நாடு இருந்தால் அந்நாட்டையும், அந்நாட்டிலுள்ள மக்களையும்; அறிவை உபயோகப்படுத்துகிறவர்கள் சிந்தித்துப் பார்ப்பவர்கள்—மனித வர்க்கத்தில்சேர்க்கப்படத்தக்கவர்கள் என்று யாராவது சொல்லுவார்களா? ஆனல் இந்தப்படிநான் கத்துவதால் நம்நாட்டைப்பொறுத்த வரையில் நான் ஏதோ சொல்வதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. ஏனென்றுல் இந்நாட்டில் அறிவை ஒதுக்கிவைத்து விட்டு நடக்கும் சிலவுகளும், பழக்க வழக்கங்களும், ஒன்ருா? இரண்டா?? கார்த்திகைத்தீபம், பங்குனித் தீபம், திவசம், அமாவாசை, கருமாதி, கலியாணம், விரதம், நோன்பு, பக்தி இவைகளைப்பற்றியா? அல்லது சாரமில்லாத சரஸ்வதி பூசையைப்பற்றியா? அல்லது சனியன் பிடித்த தீபாவளியைப்பற்றியா? எதைச்சொல்வது! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்தியாவில் ஒரு மனிதன் சம்பாதிப்பது சராசரிகணக்குப்படி மாதத்திற்கு மூன்று ரூபாய்க்குட்பட்ட தொகைதான்என்ருல், ஒரு மனிதன் தனக்கு ஏற்படுத்திக்கொள்ளும், அநியாய, ஆடம்பரச்சிலவுகளும் அநந்தமாக இருக்கின்றனவே! "உள்ளத்தைக்கொண்டு திருப்தியடைவாய்" என்று ஏழைகளுக்குப் பணக்காரர்களான பரம விரோதிகள் சொல்வது போல் நான் சொல்லவில்லை. உழைப்பிற்குத்தக்க பயனும், ஊதியமும், அதைக்கொண்டு, தனக்கு நியாயமான உடைக்கும், உணவுக்கும், ஒண்ட வசதிக்கும் சிலவு செய்ததுபோக மீதத்தை சுகாதாரம், அறிவு வளர்ச்சி, நல்லகுடியிருப்பு வசதி முதலியவைகளுக்கும் சிலவு செய்யுங்கள் என்றுதானே என்னுடைய வெடியின் ஓசையினின்று வரும் சொற்கள். இப்படிச்சொல்வது பெரும் தொகையை பூதம் காப்பது போல் காத்துக் கொண்டிருக்கும் பணக்காரனுக்கும், மதக்குருக்கள்களுக்கும், அவர்களுடைய சொற்களுக்கும் மதிப்புக்கொடுத்தோம். கொடுத்தாய் விட்டது இப்பொழுது எதைக் கண்டோம். அவரவர் பசித்த குழந்தை குட்டிகளுடனும், ஒட்டிய வயிறுடனும் உள்ள மனிதர்களைத்தான் கண்டோம். நம்முடைய வீடுகளின் தூண்களெல்லாம் முன்னேக்கி வரவும், சுவர்களெல்லாம் பின்னேக்கிப் போகிறதையும்தான் கண்டோம். நம்மை ஏவி விட்டவர்களும், அவர்களுடைய வீடு, கல்வி, சுகாதாரம், ஆகாரம், ஆகியவைகள் மேம்பட்டதுடனே, எல்லாவித ராஜபோக

> ## முட்டாள் தனத்திற்கு அறிகுறி.
>
> இந்துக்களின் முட்டாள் தனத்திற்கும், மூடபக்திக்கும் அறிகுறி தீபாவளிப் பண்டிகையேயாகும். தீபாவளி கொண்டாடுவது நம்மை ப்பார்ப்பனர்களின் அடிமைகள் என்று ஒப்புக் கொள்வதாகும். அதன் கதைகள் வெகு ஆபாசமானதும், சூழ்ச்சியானதுமாகும். படித்துப்பாருங்கள்.

பண்டார சந்நதிகள் என்று வேஷம் போடும் படுமோசக்காரர்களுக்கும் அல்ல. (மனமாற்றமடைந்தால் நல்லதுதான்) பாடுபடும் தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும், தாழ்ந்த வகுப்பென்று கருதப்பட்டிருப்பவர்களுக்கும் தான். ஏனென்ருல் ஒரு பணக்காரன் அன்னக்காவடியானுன் என்ருல் எத்தனையோ ஏழைகள் பிழைத்தார்கள் என்றுதான் நான் நினைத்துக்கொள்வது. ஒருபணக்காரனுக்கு முன் இருந்ததை விட இன்னும் ஒரு கோடி ரூபாய் சேர்ந்தது என்ருல் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏழைகளை வஞ்சித்து, கொடுமைப் படுத்தி, சசக்கிப் பிழிந்திருப்பான் என்றுதான் நான் நினைத்துக்கொண்டு கர்ஜிப்பது.

தோழர்களே! நம்முடைய பாட்டன் பூட்டன் முதல் இன்று எத்தனை வருடங்களாகத்தான் மதப்பழக்க வழக்கங்களுக்கும், சுகங்களுடன் மக்களைக்காலடியில் போட்டுக் கொண்டிருப்பதைக் காணவில்லையா? அல்லது தெரியவில்லையா?

சகோதரர்களே! தீபாவளிக்கென்று பணம் கடன் கொடுக்க சில பணக்காரர்கள் முன்வரலாம். நீங்களும் பெறலாம். சில முதலாளிகள் உங்களுக்கு ஆசை வார்த்தைகளைக் காண்பிக்கலாம். கடைசியில வட்டிக்கு வட்டி சேர்த்து வட்டியும், முதலுமாக உங்களைப் பிழிந்து, நசுக்கி, இரத்தம் கக்கும் படியாக வாங்கிவிடுவார்கள். அவர்களுக்கு ஆதரவாகவும், அவர்களுடைய அநியாயத்திற்கு அநுசரணையாகவும், அரசாங்கமும், தக்க ஆயுத பலத்துடனும், அதிகார வர்க்கபலத்துடனுமிருக்கிறது. ஆகவே தொழிலாளத் தோழர்களே கஷ்டப்பட்டுக்கால் வயிற்றுக்கஞ்சிக்கும் கடும் வெய்யிலும் மழையுமெனப் பாராது கால், கைகள் கடுக்கப் பாடுபடும்

மாணிக்கப்பட்டது.

(5) சமதர்மக்கொள்கைகளைக்கொண்டு சாயர்புரத்திலிருந்து வெளிவரும் "சகோதரன்" பத்திரிகையை வரவேற்பதோடு மேற்படி பத்திரிகைக்குச் சந்தாதாரராய் எல்லாரும் சேர்ந்து, அதை ஆதரிக்கும்படி இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

ஈரோட்டிற்கு நாயுடு விஜயம்.

எங்கும் பெரும் ஆதரவு.

Dr. பி. வரதராஜுலுநாயுடு அவர்களும், சேலம் தோழர்பவானிசிங் அவர்களும் 21-10-34ந் தேதி ஈரோடுவந்தார்கள். இங்குள்ள பிரபலஸ்தர்களையும், ஓட்டர்களையும் கண்டு பேசினர். ஈரோடு டவுனிலுள்ள ஓட்டுகளில் 100க்கு 90க்குக்குறையாமல் நாயுடுவுக்கே கிடைக்கும். மற்றும் ஈரோடுதாலூகாக்களிலுள்ள, கிராமங்களிலுள்ள ஓட்டுகளில் பெரிதும் நாயுடுவுக்கே கிடைக்கும். வடஆற்காடு ஜில்லாவிலுள்ள ஓட்டுகளில் 100க்கு 90ஓட்டுகளும், சேலம் ஜில்லாவிலுள்ள ஓட்டுகளில் 100க்கு 75 ஓட்டுகளும், கோவை ஜில்லாவிலுள்ள ஓட்டுகளில் பெரும்பாகமான ஓட்டுகளும் கிடைக்குமெனத்தெரிகிறது. டாக்டர் நாயுடு தைரியமாகவே இருக்கிருர்.

தொழிலாளத் தோழர்களே! விவசாயிகளே!! வரப்போகும் தீபாவளி என்ற பயனற்ற ஒரு பழக்கத்திற்காக, பெரியவர்கள்—முன்னேர்கள் செய்தார்கள்—அநுசரித்தார்கள் என்ற காரணத்திற்காக ஒரு காசும் சிலவு செய்யாமல் எல்லா நாட்களைப்போல் அதையும் ஒரு நாளாகக்கொண்டு, நீங்களும் அறிவுடன் நடந்துகொள்ள நான் வேண்டிக் கொள்வதுமன்னியில் உங்கள் பின் சந்ததியாரும் தீபாவளியை பகிஷ்கரிக்கும்படிக்கு எழுதியும் வையுங்கள்.

ஏதோ யானைவெடி சொல்கிறது. அதுவும் சுயமரியாதை யானைவெடிதானே என்று என் சப்தத்தைக் கவனியாமற் போனுல் கஷ்டமும், நஷ்டமும், அறியாமையும் உங்களைச்சூழ்ந்து கொள்வதோடு உங்களை ஏமாற்றுபவர்களின் ஏய்ப்புத் தன்மைக்கும், விஷமத்திற்கும் புத்துயிர் கொடுத்ததாக ஆவீர்கள். ஆனல் இந்த வெடியை வெறும் வெடி என்று நினைத்தால் தள்ளிவிடுங்கள். விஷயமுள்ள வெடி என்று நினைத்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். இனி ஒருதரம் சந்திப்போம். ஒரே ஒரு வார்த்தை! தீபாவளியைச் சுத்தமாகப் பகிஷ்கரியுங்கள்!!

வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

சர். ஷண்முகம் வெற்றி பெறுவது நிச்சயம். எப்படி? இந்தத்தொகுதியில் 100க்கு 95 பேர்கள் படித்தவர்கள், அறிவாளிகள். ஆகையால் பார்ப்பனர்கள் இந்தத் தொகுதியாரை ஏமாற்ற முடியாது. 100க்கு 70 ஓட்டுகள் கையில் கொடுக்கப்பட்டுவிட்டன. ஆதலால் ஷண்முகம் வெற்றி பெறுவது நிச்சயம்.

பம்பாய்

சமதர்ம மகா நாட்டுத் தீர்மானங்கள்.

22-10-34ல் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் சமதர்மிகள் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

1. பூரணசுயேச்சைலட்சியத் தீர்மானம்.

"காங்கிரஸ் பூரணசுயேச்சை லட்சியமென்பது உழைக்கும் பொதுஜனங்கள் கைக்கு ஆட்சியும், அதிகாரமும் வருவது என்பதாக பொருள்பட வேண்டும்.

இதற்காக ஏகாதிபத்தியத்துடன் எவ்வித சமரசமும் செய்து கொள்ள முடியாது"

பிரரேபித்தவர்:—

கமலாதேவி,சட்டோபாத்தியாயா

இவர் பேசியதாவது:—

"ஏற்கனவே காங்கிரஸின் லட்சியமானது பலதடவைகளில் பற்பல விதமாக மாறி வந்திருக்கிறது. அவ்விஷயமாக சமதர்மிகள் தங்கள் நிலையை திட்டமாக அறிவுறுத்திவிடவேண்டியது அவசியமாகும். பூரண சுயேச்சை என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினின்றும் பூரணமாகவிலகி விடுவதென்பதே. பொது ஜனங்களைத் தட்டி எழுப்பும் படியான வேலைத்திட்டத்தை சமதர்மிகள் உடனே கைக்கொள்ள வேண்டும். தங்கள் கைக்கு அதிகாரம் மாறுவதென்பதே சுயேச்சை என்பதின் அர்த்தமென்பதை பொதுஜனங்கள் தெளிவாக அறிந்து கொள்ளுமாறு செய்யவேண்டும் என்றும்,

மகாத்மா காந்தி விலகுவதைப் பற்றிய விஷயத்தைப்பற்றி பிரமாதப்படுத்தக்கூடாது. மகாத்மா தலைமை வகித்து நடத்த வேண்டுமா இல்லையா என்பது இப்பொழுது முக்கிய விஷயமல்ல. பூரண சுயேச்சை லட்சியத்தை அடைவதே முக்கியமானதாகும்." என்றும் பேசினர்.

சுவர்க்கத்திற்கு வழி.

ஹரித்வாரைச்சேர்ந்த சுவாமி முக்தானந்தர் பின்பு கூறியதாவது:—

"இந்தியா வேண்டுவது விடுதலை. பட்டினியாகக்கிடக்கும்கோடிக்கணக்கானவர்களுக்குக் குடிக்கக் கஞ்சிவேண்டும். மகாத்மாவின் வேலை முறைகளால் இந்த நோக்கம் கைகூடுமென நான் நினைக்கவில்லை. மகாத்மா பெரிய ஆன்மார்த்த விஷயங்களில் தலைவராக இருக்கலாம். அவருடைய வேலை முறைகள் சுவர்க்கத்திற்கு வழி காட்டியாகவுமிருக்கலாம். ஆனால் இதனால் நமது விடுதலை லட்சியமும், பொருளாதார சுபிட்சமும் ஏற்பட்டு விடுவதற்கில்லை. ஷை லட்சியமும் நமக்குக்கைகூடாது" என்று சொன்னர்.

2. முக்கிய கொள்கையைப் பற்றிய விளக்கத்தீர்மானம்.

"காங்கிரஸ்கேட்கும் சுயராஜ்யமென்பதால் பொது ஜனங்களுக்கு எவ்விதமான நன்மைகளேற்படுமென்பதைவிளக்க வேண்டும்.

பொது ஜனங்களைப்பிறர்சுரண்டுவதைத் தடுப்பதற்காக வேண்டும் அரசியல் விடுதலை, என்பதில் பட்டினிகிடக்கும் கோடிக்கணக்கானவர்களின் உண்மைப்பொருளாதார விடுதலையும் உட்படவேண்டும்

இந்திய சர்க்கார் எதிர்கால அரசியல் திட்டத்தில் கீழ்க்கண்ட அம்சங்கள் முக்கியமாக சேர்க்கப்பட வேண்டும், அதாவது,

உழைக்கும் பொது ஜனங்களுக்கு எல்லா அதிகாரங்களையும் மாற்றிவிடவேண்டும். தேசத்தின் பொருளாதார வாழ்க்கை அபிவிருத்தி வேலையைச் சர்க்காரே திட்டப்படுத்தி மேற்பார்வை பார்த்து வரவேண்டும். இரும்புத் தொழில்போன்ற முக்கிய தொழில்களை சர்க்காரே மேற்கொள்ள வேண்டும். வெளிநாட்டு வர்த்தகத்தையும் சர்க்காரே ஏகபோகமாக கைக்கொள்ளள வேண்டும்.

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

பகுத்தறிவு.

ஈரோடு 1934- அக்டோபர் 28-உ

ஏமாற்றுந்திருவிழா காங்கிரஸ் கூத்து.

காங்கிரஸ் கூட்டங்களைப் பற்றியும், அதன் மகாநாடுகளைப்பற்றியும் அவையெல்லாம் ஏமாற்றுந்திருவிழா என்று நாம் அவ்வப்போது எழுதிவந்திருப்பதை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

அதுபோலவேகாங்கிரஸ்நேயர்கள் பலருக்கும் இவ்விஷயம்இப்போது வரவர உண்மையாகி வந்து காங்கிரசின் பேரால் தங்கள் பிழைப்பை நிர்த்தாரணம் செய்து கொண்டவர்கள் தவிர மற்றப்படி தாங்கள் சொந்தத்தில் பாடுபடவும், வேறு வழியில் அரை வயிற்றுக்காவது சம்பாதித்துக் கொள்ள மார்க்கமிருக்கிறதென்று தைரியம் கொள்ளவும் உறுதியும் ஊக்கமும் உடையவர்கள் பெரும்பாலும் காங்கிரசிலிருந்து விலகி வந்துவிட்டதும், வந்துகொண்டிருப்பதும் எவரும் அறியாததல்ல.

கடைசியாக பழம்பெரும் காங்கிரஸ்வாதி என்றும், காங்கிரசிற்கே தனது வாழ்நாள் முழுவதையும் ஒப்படைத்த தியாகி என்றும் காங்கிரஸ்காரர்களாலும், பார்ப்பனர்களாலும் சொல்லப்பட்டு வந்த தோழர் மாளவியா அவர்களும் கூட காங்கிரஸ் கொள்கைகள் தந்திரமானது என்னும் காரணத்தால் காங்கிரசோடு போட்டி போடத் துணிந்துவிட்டார்.

இது அவ்வளவு முக்கிய விஷயமல்லவென்று சொல்லிவிடலாம்.

என்றாலும் தோழர் காந்தியவர்களே இன்று காங்கிரசை விட்டு விலகி விட்டார்.

விலகும்போது அவர் என்ன சொல்லிக்கொண்டு விலகுகிறார் என்பதுதான் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயமாகும். காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள்—எனது சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் பொதுஜனங்களை ஏமாற்றுவதோடல்லாமல் என்னையும் ஏமாற்றுகிறார்கள். ஆதலால் நான் விலகிக்கொள்ள வேண்டியதாய் இருக்கின்றது என்று வெள்ளையாக அருத்தமாகும்படியே சொல்லிக்கொண்டு விலகி விட்டார்.

இதிலிருந்தாவது இதுவரை காங்கிரஸ்காரர்கள் நடத்தி வந்த நாடகங்களை நாம் ஏமாற்றும் திருவிழா என்று சொல்லி வந்தது உண்மையா அல்லவா என்பதை யோசித்துப் பார்க்கும்படி நடுநிலைமை வாதிகளையும், பகுத்தறிவு வாதிகளையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

தோழர் காந்தியார் தான் விலகிக்கொள்ளப்போகும் காரியத்துக்கு எவ்வளவு விளம்பரம் கொடுத்து அதை எவ்வளவு பிரமாதமாக்க வேண்டுமோ அவ்வளவு பிரமாதமாக்கினார் என்றாலும் "காந்திக்கு ஜே" என்னும் பேரால் வயிறு வளர்க்கும் ஒரு கூட்டத்திற்கு அவர் விலகி விட்டால் தங்களுக்கு ஆபத்து என்றுதோன்றியதால் அவர்கள் அதைஎவ்வளவு மறைக்க வேண்டுமோ அவ்வளவு மறைத்துப்பார்த்தார்கள்.

என்றாலும் காங்கிரசிலுள்ள சமதர்ம வாதிகள் என்னும் கூட்டத்தார்கள் இதை லக்ஷியம் செய்யாமல்

"இன்று நாட்டுக்கு வேண்டியது காந்தியார் இருப்பதா போவதா என்கின்ற பிரச்சினையல்ல. அவர் இருந்தாலும் சரி, போனாலும் சரி அதைப்பற்றி சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. கோடிக்கணக்கான ஏழைப்பாமர மக்களை ஒரு சில சுயநலக்கார மூடர்கள் தாங்கள் மேல் ஜாதியாரென்றும், பணக்காரர்கள் என்றும் சொல்லி இழிவுபடுத்திக்கொடுமை செய்கிறார்களே! அதை எப்படி ஒழிப்பது, எப்படி அழிப்பது என்பதுதான் எங்கள் பிரச்சினை"

என்று கூறிவிட்டார்கள்.

இதற்கு எவ்விதபதிலும் சொல்லாமல் அந்தப்பிரச்சினையை மறைக்கடிப்பதற்கு "காந்தியார் போய் விட்டாரே! காந்தியார் போய் விட்டாரே" என்று வேஷ அழுகை அழுது நீலிக்கண்ணீர் வடித்து மக்களை மறுபடியும் ஏய்க்கப் பார்க்கிறார்கள்.

எனவே இது ஏமாற்றுந்திருவிழாவா அல்லவா என்று கேட்கின்றோம்.

தோழர் காந்தியார் தான்காங்கிரசிலிருந்து விலகிக் கொள்வதற்கு இதற்கு முன் சொன்ன காரணங்களைவிட காங்கிரஸ் கூட்டத்திலேயே ஒரு முக்கிய காரணத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருக்கிறார்.

"நான் காங்கிரசிலிருப்பதை விட வெளியிலிருப்பதால் மக்களுக்கு நன்மையான காரியங்கள் அதிகமாகச் செய்யக்கூடும் என்றும் எண்ணுகிறேன்" என்றும்

"காங்கிரசில் உள்ளவர்கள் வெளி வேஷங்களையும், ஊழல்களையும், அகம்பாவங்களையும் ஒழித்து பரிசுத்தர்களாகாத வரையில் நான் காங்கிரசிலிருந்து விலகவேண்டி இருக்குமென்று வங்காளத்தில் கூறிஇருக்கிறேன். அதற்கு முன் கூட பல சமயங்களில் குறிப்புக் காட்டி இருக்கிறேன். நான் காங்கிரசிலிருந்து விலகுவதன் இரகசியம் இதுதான்"

என்றும் சொல்லிஇருக்கிறார் என்றால் காந்தியார் விலகுவதற்கு இந்தப் பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிக்கைகளும் தத்துவார்த்தம் செய்வது என்பது மற்றொரு ஏமாற்றுந்திருவிழாவா அல்லவா என்று மறுபடியும் கேட்கின்றோம்.

அன்றியும் தோழர் காந்தியார் ஜெயிலில் இருந்து வந்த பிறகும்,ஜெயிலுக்குப் போவதற்கு முன்பு ஒன்று இரண்டு தடவையும் கூட காங்கிரசில் இருப்பவர்களின் அயோக்கியத்தனத்திற்காகவும், பித்தலாட்டங்களுக்காகவும், அவரது சிஷ்யர்கள் என்பவர்களே செய்த சூட்சிகளுக்காகவும் என்று சொல்லியே பட்டினி இருந்து வந்திருப்பது எவரும் அறியாததா என்றும் கேட்கின்றோம்.

இவ்வளவும் ஒரு புறம் இருந்தாலும் உண்மையிலேயே தோழர் காந்தியவர்களே தமது நடவடிக்கையிலும், பேச்சிலும் முன்னுக்குப்பின் முரணாகவும் எவ்வளவு தடவை பேசியும், எழுதியும், நடந்தும் வந்திருக்கிறார் என்பதை நாம் ஞாபகமூட்டவேண்டியதில்லை. காந்தியார் ஓரளவுக்காவது பரிசுத்தத் தன்மை அடைவதையும், அவரது முயற்சி ஒரு அளவுக்காவது வெற்றி பெறுவதையும் பாழாக்கி உலகத்தின் முன்பு, அறிவாளிகள் என்போர்களால் அவரைப்பற்றி சிரிக்கும்படி செய்ததும் இந்தப் பரிகாசங்களையும், தோல்விகளையும் தாங்கமுடியாமல் ஓடும்படி செய்ததும் நமது தென்னாட்டுப்பார்ப்பனர்கள்!— பார்ப்பனர்கள்!! பார்ப்பனர்கள்!!! தான் என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம்.

காங்கிரசில் ஏற்பட்ட பலன்களையெல்லாம் பார்ப்பனர்களே அடையும்படியாகவும், தலைமைப்பதவிகளிலெல்லாம் பார்ப்பனர்களே இருக்கும்படியாகவும், தியாகத்தின் மூலமோ, வீரத்தின் மூலமோ ஏற்பட்ட பெருமைகள் எல்லாம் பார்ப்பனர்களுக்கே இருக்கும்படியாகவும் இங்குள்ள பார்ப்பனத்தலைவர்களும், பார்ப்பனப்பத்திரிகைகளும் செய்துவந்த சூட்சியேஇன்று காங்கிரசையும், காந்தியாரையும் உலகத்தின் முன் சிரிப்புக்கிடமாக்கிவைத்து விட்டது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவோம்.

நம் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் இந்தக்குணங்களை மாற்றிக்கொள்ளாதவரை இன்னமும் எவ்வளவுதந்திரம் செய்தாலும், காங்கிரசின் பேரால் யார் வெற்றி பெற்றாலும், காங்கிரஸ் கவர்ன்மெண்டையே கைப்பற்றினாலும் (ஒரு நாளும் ஆகப்போவதில்லை.) பார்ப்பனர்களது நிலைமை இன்னமும் மோசம்தான் ஆகுமே தவிர கடுகளவாவது முன்னேற்றமடைய முடியும் என்பதை கனவிலும் கருதவேண்டாமென்றே பார்ப்பனத்தலைவர்களுக்கும், பார்ப்பனப்பத்திரிக்கைகளுக்கும் எச்சரிக்கை செய்கின்றோம்.

தோழர் காந்தியார் காங்கிரசை விட்டு விலகி விட்டதினாலேயே அவர் தந்திரங்களையும், சூட்சிகளையும், பித்தலாட்டங்களையும், அயோக்கியத்தனங்களையும் வெறுக்கின்றார் என்று நாம் சொல்லிவிட முடியாது.

அவர், தான் அயோக்கியத்தனங்களையும், ஒழுக்க ஈனங்களையும், ஊழல்களையும் வெறுப்பதாக ஜனங்கள் நினைக்க வேண்டுமென்றும், இதுவரை நடந்து வந்த அப்படிப்பட்ட காரியங்களுக்கு தான் சம்பந்தப்படவில்லை என்பதாக பொது ஜனங்கள் அறிய வேண்டுமென்றும் தான் இன்று காந்தியார் விலகும் நாடகம் நடிக்கப்படுகின்றதே தவிர வேறில்லை என்ப

ரோஜா முத்தையா

தே நமது அபிப்பிராயம் என்பதை வாசகர்கள் அறிய விரும்புகிறோம்.

எப்படியானாலும் காந்தியார் விலகி விட்டாரென்பது உறுதியாகி விடுமானால் சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசில் சேருவதற்குக் காலம் வந்துவிட்டது என்பதுகூட நமது அபிப்பிராயமாகும்.

காந்தியார் இல்லாத காங்கிரசைக் கைப்பற்றினால் பார்ப்பனீயத்தை ஒரு கை பார்த்து விடலாம் என்கின்ற எண்ணம் சரியாகவோ, தப்பாகவோ சிறிதுகாலமாகச் சிலருக்கு இருந்து வருகின்றது என்றாலும் காங்கிரசில்வடநாட்டுக்காரர்களுக்குள் காங்கிரஸ் சமதர்மக் கட்சி என்று ஒன்று இருப்பது போல் தென்னாட்டில் காங்கிரஸுக்குள் பார்ப்பனரல்லாதார் கட்சி என்பது ஒன்று இருக்க வேண்டியதாகத்தான் இருக்கும்.

அந்தப்படி இல்லாமல் இருக்கும்படி பார்ப்பனர்கள் நடந்து கொள்ளுவார்களானால் எல்லோருக்கும் நன்மை தான்.

முடிவாக காந்தியாருக்கும் பார்ப்பனர்களுக்கும் இருந்த சம்மந்தம் எவ்வளவு—காந்தியார் விலகிவிட்டதற்குப் பார்ப்பனர்கள் எதை உத்தேசித்துத்துக்கப்பட்டார்கள் என்பதை அறிய ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்தி இதை முடிக்கின்றோம். அதாவது "காந்தியார் விலகிவிட்டாரே தென்னாட்டில் சட்டசபைத் தேர்தல்கள் தோல்வி ஆகிவிடுமே" என்றுதான் இந்தப் பார்ப்பனர்கள் ஓலமிட்டார்களே தவிர வேறு ஒன்றுக்கும் ஓலமிடவில்லை. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடியது என்னவென்றால் தேர்தல் முதலிய காரியங்களில் பொது ஜனங்களை ஏமாற்ற காந்தியார் ஒரு ஆயுதமாக இருந்தது இப்போது இல்லாமல் போய்விட்டதே என்கின்ற விசனம் தவிர காந்தியாரிடத்தில் இப்போது இந்தப்பார்ப்பனர்களுக்கு எவ்வித உள் அன்பும், விசுவாசமும் பிடித்தமும் இல்லை என்பதுதான்.

ஆகவே இதுவரையில் பார்ப்பனர்கள் நடத்திவந்த ஏமாற்றுந்திருவிழாவுக்கு ஒரு அளவுக்கு சாவுமணி அடித்தாய் விட்டது.

வெங்கிட்டரமணா

"கோவிந்தா ஆ கோஓவிந்தா"

'வெங்கிடாசலபதிக்குதர்மம்செய்யுங்கள்'

மானங்கெட்ட பிழைப்பு.

காங்கிரசின் பேரால் எலக்ஷன் நடத்துகின்றவர்கள் தங்களுடைய (அதாவது அபேட்சகர்களாக நிற்கும் ஆசாமிகள் தனிப்பட்ட முறையில் தங்களுடைய) யோக்கியதைகள் தேசத்தார்கள் அறிந்திருப்பதால் தங்களுக்கு சொந்தத்தில் ஓட்டு கிடைக்காது என்று தீர்மானம் செய்து கொண்டு "காந்திக்கு ஓட்டுச்செய்யுங்கள்" என்று கேட்டு மக்களை ஏமாற்றிவருவது ஒருபுறமிருக்க இவ்வேமாற்றுதலை ஜஸ்டிஸ் கட்சியார் வெளியாக்கும் முறையில் காந்தியார் காங்கிரசைவிட்டுப்போய் விடுகிறேனென்று சொல்லுவதையும், அந்தப்படி காங்கிரசை விட்டு அவர் வெளியேறுவதற்கு உண்டான காரணங்களை அவர் எடுத்துச்சொன்னபடியே வெளியிடுவதையும் பார்த்த காங்கிரஸ்காரர்களும், பார்ப்பனப்பத்திரிக்கைகளும் அடக்க முடியாத ஆத்திரம் கொண்டு வாயில் வந்தபடி எல்லாம் இழிதகைமையில் வைகின்றனர். இதை நாம் ஒரு வெட்கம் கெட்ட ஆத்திரம் என்றும், மானங்கெட்ட பிரசாரம் என்றும் தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

காந்தியார் வெட்ட வெளிச்சமாக முழு முட்டாள்களுக்கும் புரியும் மாதிரியில் தான் விலகும் காரணங்களை விளக்கியிருக்கிறார்.

1. என்னைத்தலைவர் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் என் இஷ்டப்படி நடப்பதில்லை. ஆனால் என்னை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள்.

2. காங்கிரஸ்காரர்கள் பலரிடத்தில் நாணயமில்லை.

3. என்னை உபயோகித்துப் பயன்பெறுவதற்காகவே என்னிடம் பக்திவிசுவாசம் உள்ளவர்கள் போல் நடிக்கிறார்கள்.

4. கதரில் நம்பிக்கை இல்லாதவர்கள் கதரைக்கட்டி ஏமாற்றுகிறார்கள்.

5. சத்தியத்திலும், அஹிம்சையிலும் நம்பிக்கையில்லாதவர்கள் சத்தியவான்கள்போல வேஷம் போட்டு ஏமாற்றுகிறார்கள் என்றும் சொன்னதோடு, இன்னமும் காங்கிரஸ்காரர் என்பவர்களின் வண்டவாளங்களையும், நாணயக்குறைவுகளையும் அவர் நன்றாய் எடுத்துக்காட்டிவிட்டு எந்தக்காரணத்தை முன்னிட்டும் தான் இனிமேல் காங்கிரசில் இருக்க முடியாது என்று முடிவாய் சொல்லியும் விட்டார்.

இப்படி இருந்தும் எலக்ஷனில் நிற்பவர்கள் "காந்தியாருக்காக ஓட்டுப்போடுங்கள் நிற்கும் ஆசாமிகளைக்கவனிக்காதீர்கள்" என்று கேட்டால் இதில் கடுகளவாவது நாணயமோ, மானம் வெட்கமோ இருக்கின்றதா என்றுதான் கேட்கின்றோம்.

ஓட்டர்கள் எப்படி வேண்டுமானாலும் ஓட்டுச்செய்யட்டும். நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. இன்று நம்நாட்டு மக்கள் 100க்கு 92 பேர்கள்தற்குறிகள்- அதிலும் விஷயம்தெரியக்கவலையுள்ளவர்கள் நூற்றுக்கு ஒருவர் இருவர்கூட இருக்கமாட்டார்கள். இவர்களிலும் உண்மையான விஷயம் தெரிந்துகொள்ளக்கூடியவர்களும் தெரிந்துகொள்ள சௌகரியமுடையவர்களும் 1000ல் இரண்டொருவர்கூட இருக்க முடியமா? என்பது சந்தேகம்.

மேலும்பார்ப்பனர்பிரசாரமும், பார்ப்பனக்கூலிகள் பிரசாரமுமே தான்நடைபெற சாத்தியமாகின்றது. அவர்கள்தங்கள்வாழ்வுக்கும், ஆதிக்கத்துக்கும் மற்றவர்களை அடக்கி ஆண்டு எல்லாஉத்தியோகங்களையும், பதவிகளையும் தாங்களே அனுபவிக்கவும் அனுகூலமாகவே தங்கள் பிரசாரங்கள் நடக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதற்கு பார்ப்பனரல்லாதாரிடமே பெரிதும் பணம் பறித்து பார்ப்பனரல்லாதாரிலே கூலிகளைப்பிடித்து பிரசாரம் நடத்திவருகிறார்கள். பத்திரிக்கைகளும் பெரிதும் பார்ப்பனர்களே நடத்துகிறார்கள் என்பதோடு பத்திரிகை நிருபர்களும் எல்லோரும் பார்ப்பனர்களாகவே இருந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இவர்களுடைய ஏதாவது ஒரு புரட்டை பார்ப்பனரல்லாதார் வெளிப்படுத்தினால் அதற்கு இவ்வளவு ஆத்திரப்படுவதென்றால் மனம் போனபடிவைவதென்றால் இதை ஏன் மானங்கெட்ட ஆத்திரம் என்று சொல்லக்கூடாது என்று மறுபடியும் கேட்கின்றோம்.

தெருவில் திரியும் சோம்பேரிகள், நாணயமாய்பிழைக்கமார்க்கமில்லாத அயோக்கியர்கள் ஆகியவர்கள் தங்கள் நிஜவேஷத்தோடு போனால் பிச்சை போடாமல் உதைத்து அனுப்புவார்கள் எனப்பயந்து மேலெல்லாம் பட்டை நாமங்களையும், உருத்திராட்ச விபூதிகளையும் அணிந்து கொண்டு "வெங்கடாசலபதிக்குகோவிந்தா-வெங்கிடாசலபதிக்கு தர்மம் போடுங்கள்" "பழனியாண்டவனுக்கு அரோகரா—முருகனுக்கு தர்மம் செய்யுங்கள்" என்று கூப்பாடு போட்டு பிச்சைகேட்பதற்கும், இந்த தேர்தல் ஆட்கள் "மகாத்மா காந்திக்குஜே—காந்தியாருக்கு ஓட்டுப்போடுங்கள்." என்று கூப்பாடுபோட்டு ஓட்டுக்கேட்பதற்கும் என்ன வித்தியாசம் என்று தான் தெரிய ஆசைப்படுகிறோம்.

அதுவும் தோழர் காந்தியாரே இந்த விஷயம் தெரிந்து "காங்கிரஸ்காரர்கள் என்னிடம் 'பக்தி விசுவாசம் இருப்பதாக வேஷம் போட்டுக்காட்டி பாமர மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆதலால்நான் காங்கிரசை விட்டு வெளியேறுகிறேன்" என்று சொன்னபிறகும் கூட மறுபடியும் இந்தப்பாடம் படித்து ஓட்டுப்பிச்சை கேட்கிறார்கள் என்றால் இந்தக் கூட்டத்திற்கு என்றுதான் மானம் வெட்கம் நாணயம் வரும் என்று கேட்கின்றோம்.

இந்த நிலையில் "ஜஸ்டிஸ் கட்சியார் அயோக்கியத்தனம் செய்கிறார்கள்" என்றும் "தோழர் ராமசாமி முதலியார் அயோக்கியத்தனம் செய்கிறார்கள்" என்றும் பார்ப்பனப் பத்திரிகைகளும், கூலிகளும் எழுதுவதின் யோக்கியதை நமக்கு விளங்கவில்லை. கடவுள் பெயரைச்சொல்லி பல சோம்பேரிகளும் அயோக்கியர்களும் பாமர மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதற்காகவே உலகில் கடவுள் ஒழிப்புச் சங்கங்கள் தோன்றி வேலை செய்து ஒரு அளவு வெற்றிபெறுவது போலவே பார்ப்பனீயஒழிப்

புச்சங்கங்கள் தோன்றி வேலைசெய்து ஒரு அளவுக்கு வெற்றிபெற்று வருகின்றன, என்றாலும் இன்னமும் பலமான வேலைகள் செய்ய இம்மானங்கெட்ட செய்கைகள் தூண்டுகின்றன. நல்ல வேளையாக தோழர் காந்தியாரே இந்த விஷயம் தெரிந்து தானே காங்கிரசை விட்டு ஒழிந்துவிடுகிறேன் என்று சொல்லி விட்டதால் இனி காந்தி ஒழிப்புச் சங்கங்களுக்கு வேலை குறைந்ததென்றே மகிழ்ச்சி அடைகின்றோம்.

மற்றுமொரு போக்கிரித்தனம் என்னவென்றால் பம்பாய்க்குப் போன பார்ப்பனர்கள் அங்கிருந்துகொண்டு சர். ஷண்முகத்திற்கு ஓட்டு இல்லையென்று பத்திரிகைகளுக்குச் சேதி அனுப்புகிறார்களென்றால் இதைவிட சூட்சிக்கு வேறு ஆதாரம் என்ன?

முடிவாக வரப்போகும் தேர்தல்களில் வாக்காளர்கள் இந்தப் புரட்டுகளுக்கு ஏமாந்து போகாமல் அபேட்சகர்களின் யோக்கியதையையும், செய்யப்போகும்வேலையையும் நன்றாய் அறிந்து தங்கள் இஷ்டப்படி நடக்கவேண்டும் என்றே வேண்டிக் கொள்ளுகிறோம்,

---

இந்திய சட்டசபைத் தேர்தலில்
தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களுக்கு
சென்னை ஓட்டர்களின்
பகிரங்கக்கேள்விகள்.

1. தாங்கள் சிறைசென்ற "தியாகத்"தைப்பற்றி 'ஏ' வகுப்புக்கைதியாகப் போடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதும், பிறகு அதிலும் பிறரைவிட அதிக வசதிகள் வேண்டுமென்று கேட்டு வாங்கிக்கொண்டதும், பிறகுஜஸ்டிஸ் கட்சியாரைக் கொண்டு சிபார்சு செய்து ஆஸ்பத்திரிக்கு வந்ததும், பிறகு அதைவிட்டு குறித்த காலத்திற்கு முந்திவிடுதலையாவதற்கு, ஜஸ்டிஸ்கட்சியார்சிபார்சு செய்ததுமானவிஷயங்கள் இருக்கும்போது, ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றுவதும் 'தியாகம்' என்றுசொல்லிக்கொள்வதும், யோக்யமான செயலாகுமா?

2. பெண்களில்ஒரு கூட்டத்தாராகிய தேவதாசிகளை கோவிலில் ஆடவிட்டால்தான் இந்துமதம் நிலைக்குமென்று சொல்லி பெண் சமூகத்தை இழிவு படுத்தியதங்கட்கு பெண்களுடைய ஓட்டுகளைக் கேட்க வெட்கமில்லையா?

3. ஜஸ்டிஸ் கட்சியை 'வகுப்புவாதக்' கட்சியென்று கூறும் தாங்கள், உங்களுடைய இனத்தார்களாகிய பிராம்மணர்களின் வீடுகளில் 100க்கு 99ல் "To Let for Brahmins Only" ("பிராம்மணர்களுக்கு மட்டும் வாடகைக்கு விடப்படும்") என்று போர்டுகள் போடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் சொல்லுகிறீர்கள்?

4. "வகுப்புவாதக் கட்சி" என்று நீங்கள் கூறும் ஜஸ்டிஸ் கட்சியின் பிரமுகர்களால்நடத்தப்படும் பச்சையப்பன் காலேஜ், தொண்டைமண்டலம் ஹைஸ்கூல் முதலிய பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களில் 100க்கு சுமார் 65 பேருக்குமேல் பிராம்மணராயிருக்க, வகுப்புவாதமே கடுகளவும் இல்லாததாகவேஷம்போடும் தங்கள்இனத்தாரால் (பிராம்மணரால்) நடத்தப்படும் மயிலாப்பூர் P. S. ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் (Hindu High School) முதலியபள்ளிகளில்100க்கு2பேர் கூட பிராம்மணரல்லாத உபாத்தியாயர்கள் இல்லாதிருப்பதற்குக் காரணமென்ன?

5. இந்திய சட்டசபையில் மொத்த அங்கத்தினர்கள் 145. இதில் 40 பேர் சர்க்காரால் (நாமினேஷன்)நியமிக்கப்படும் சர்க்கார் "தாஸர்கள்;" 9 பேர் ஐரோப்பியர்கள்; 7 பேர் நிலச்சுவான்தார்கள்; 30 பேர் முஸ்லீம்கள்; 4 பேர் வர்த்தகத் தொகுதியைச் சேர்ந்தவர்கள்; 2 பேர் சீக்கியர்கள். ஆக மொத்தம் 92 போக பாக்கி53.இதில் காங்கிரஸ்காரர்கள் எத்தனை பேர் வரமுடியும்? அப்படியே 53-ம் வந்தாலும் 92 பேருக்கு எதிரிடையாக எதைச்சாதிக்க முடியும் என்பதை விளக்க முடியுமா?

6. அப்படியே ஒருவேளை தங்களுடைய "பேச்சு வன்மையால்" இதர 144 பேரையும் தங்கள் கொள்கைக்குத் திருப்பமுடிந்தாலும், வைஸ்ராயினுடைய (Certification(சர்ட்டிபிகேஷன் அதிகாரம் இருக்கும் வரையில் தங்களால் என்ன செய்ய முடியும்?

7. பெண்கள் உரிமை, தீண்டாமை ஒழித்தல் முதலிய சகலசமுதாயச் சீர்திருத்தத் துறைகளிலும் விரோதமான கொள்கையைக்கொண்டதங்களையும், தங்களுடைய கட்சிக்காரர்களையும் சட்டசபைக்கு அனுப்புவதால் ஜன சமூகத்திற்கு என்ன பிரயோஜனமிருக்கிறது?

8. சென்ற சட்டமறுப்புச் சமயத்தில் திரு. பக்தவத்சல முதலியார், திரு. முத்துரங்க முதலியார் போன்ற பலபிரமுகர்களும், இன்னும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் போலீசாரால் எவ்வளவோ அடிபட்டிருக்க திரு. பாஷ்யமய்யங்கார் அவர்கள் அடிபட்டதற்கு மாத்திரம் சென்னை சட்டசபையில் ஒத்திவைக்கும் தீர்மானம்;இந்திய சட்டசபையில் சரமாரியான கேள்விகள்; பார்லிமெண்டில் கேள்வி; இவ்வளவும்போதாமல்திரு. காந்தியவர்கள் இர்வினுக்கு எழுதிய கடிதத்திலும் இதைப்பற்றிய குறிப்பு—இவ்வளவும் செய்ததிலிருந்து காங்கிரஸ் ஸ்தாபனமானது பார்ப்பனர்களுடைய கோட்டைஎன்பதைத்தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

9. திரு. காந்தியவர்கள் வந்த போதுமாத்திரம் ஹரிஜன சேவை என்ற பெயரால் சேரியைக் கூட்டியதும், சேரிக் குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து முழுக்காட்டினதுமான நாடகமெல்லாம் "ஹரி ஜனங்களின்" பெயரால் பணம் திரட்டியதோடு சரியாய்ப் போய்விட்டதா? அந்தப் பணம் என்னவாயிற்று?

10. சோம்பேறிப் பிச்சைக்காரர்கள் தங்களுடைய வயிற்றுப் பிழைப்பிற்காக திருப்பதி "வெங்கடாசலபதியையும்", "பழனி முருகனையும்" சொல்லி பணம் கேட்பது மாதிரி, தங்களுக்கு சொந்த யோக்கியதை இருந்தால் "மகாத்மா காந்தி" பெயரையும், "காங்கிரஸ்" பெயரையும்சொல்லி ஓட்டுக் கேட்பீர்களா?

11. சென்ற சட்ட மறுப்பில் பல்லாயிரக்கணக்கான தொண்

முதல் மந்திரியார் சீக்கிரம் கவனிப்பாரா?

கோயம்புத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு மீது சுமார் 30 மெம்பர்கள் சேர்ந்து "நிர்வாக ஊழல்"களைப்பற்றியும்,; போர்டுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப்பற்றியும் ஒரு பிராது தயாரித்து கையொப்பமிட்டு சர்க்காருக்கு அனுப்பிய விஷயமும், மற்றும் பிரசிடெண்ட் கனம் வி. சி. வெள்ளியங்கிரிக்கவுண்டர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர பட்டக்கார கனவான்கள் முதலியவர்கள் முயற்சித்துக்கொண்டிருந்த விஷயமும் நேயர்கள் அறிந்ததாகும்.

பிறகு உடனே கனம் பட்டக்காரர்களுக்கும், சிலமெம்பர்களுக்கும், கனம் கவுண்டர் அவர்களுக்கும், ஒருவித சமாதானம் ஏற்பட்டு விட்டதாகவும், அதன் பயனாய் அப்பிராதில் கையெழுத்து செய்திருந்த கனவான்களில் ஒரு சிலர் தங்கள் கையெழுத்துக்களை வித்ட்ரா செய்துகொண்டதாகவும் தெரிய வருகிறதோடு சமாதானத்தில் ஒரு நிபந்தனை, கனம் கவுண்டர் அவர்கள் பிரசிடெண்டு ஸ்தானத்தை ராஜீனாமா செய்து விடுவதாக பெரிய இடத்தில் ஒப்புக்கொண்டிருப்பதாயும் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

இதன் உண்மை எப்படி இருந்தாலும் அதைப்பற்றி பொது ஜனங்களுக்கு அக்கரை இருக்காது. ஸ்தல ஸ்தாபன நிர்வாகங்களில் கண்ட்ராக்ட்டு வேலைகளும், சிப்பந்திகள் நியமிக்கும் வேலைகளும் பிரசிடெண்டுகளுக்கும், சேர்மென்களுக்கும் இருப்பதினாலேயே போர்டுகளிலும்,கவுன்சில்களிலும் தகரார்கள் ஏற்படுவதற்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வருவதற்கும் பெரிதும் அவசியம் ஏற்பட்டு விடுகின்றன. இதைப் பற்றி நாம் பல தடவைகளில் எழுதி வந்த பிரகாரம் போர்டுகளின் தலைவர்களிடமிருந்து அந்த அதிகாரங்களைப் பறித்து விட்டால் பிறகு சேர்மென்களும், பிரசிடெண்டுகளும், கவுன்சிலர்களுக்கும், மெம்பர்களுக்கும் யோக்கியர்களாகவும், சிநேகிதர்களாகவும் ஆகிவிடுவார்கள். தகராருக்கும் சிறிதும் இடம் இருக்காது.

ஒருசமயம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதாய் இருந்தாலும் கமிஷனர்கள் மீதுதான் வரக்கூடுமே ஒழிய வேறில்லை. அதனால் கமிஷனர்களுக்கும் நஷ்டம் இருக்காது.அவர்கள் வேறு ஊருக்கு மாற்றப்பட்டு விடலாம். மெம்பர்களுக்கும் அவசியமான காரியங்கள் கவனிக்க சௌகரியமேற்படும். ஆகவே முதல் மந்திரியார் இதை சீக்கிரம் கவனிப்பாரா?

டார்கள் அடிபட்டிருக்கும்போது, தாங்களும், திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் மாத்திரம் வாடகை மோட்டாரில் சொகுசாகப்போய் துண்டு நோட்டீஸ் கொடுத்து கைதியாகி விட்டு, இப்போது அடிபட்ட பார்ப்பனரல்லாத தொண்டர்கள் பெயரால் ஓட்டுக் கேட்பது யோக்கியமான செயலாகுமா?

12. காங்கிரஸ் பெயரினால் ஒரு பெண்ணைக்கூட தேர்தலுக்குநிறுத்தாததுமன்றி, சுயேச்சையாக நிற்கிறேன் என்று சொன்ன தேசியவாதியான ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் அவர்களை போட்டியின்றி நிற்பதற்கு இடமும் கொடாமல் செய்த காங்கிரசின் பிரதிநிதியானதங்களுக்குப் பெண் மக்கள் ஓட்டுக் கொடுப்பார்கள் என்று நீங்கள் கனவிலும் கருத முடியுமா?

13. ஜஸ்டிஸ் கட்சியில் பிராம்மணர் உட்பட எல்லோரும் சேர உரிமையுண்டு என்று சமீபத்தில் நடந்த மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றி, அதன்படி விதிகளைத் திருத்தம் செய்த பிறகும் கூட வகுப்புவாதக் கட்சியான ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள்," என்று தாங்களும், திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் பிற பிரசாரகர்களும் சொல்லி வருவதன் காரணம், உங்களுடைய அறியாமையா? அல்லது வேண்டுமென்றே செய்யும் சூழ்ச்சியா? அல்லது பார்ப்பனத் தந்திரமா?

14. காங்கிரஸ் தனது நிர்மாண திட்டங்களாகிய கீழ்க்கண்ட வேலைகளில் இதுவரை எது எதில் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை தயவுசெய்து சொல்வீர்களா?

(a) கள்ளுக்கடை மறியல்,
(b) அன்னியத் துணிக்கடை மறியல்.
(c) நீல் சிலை சத்தியாக்கிரகம்.
(d) காலேஜ்களை அடைத்து விடுதல்.
(e) வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போவதை நிறுத்துதல்.
(f) உப்பு சத்தியாக்கிரகம்.
(g) தக்ளியினாலேயே நூல் நூற்றுக் கொண்டிருத்தல்.
(h) சட்டசபைகளில் சென்று "சிங்கத்தை அதன் குகையில் எதிர்த்தல்,"
(i) "ஹரிஜனங்களு"க்குக் கோவில்களைத் திறந்து விடுதல்.
(j) வீட்டுக்கு வீடு ராட்டினத்தில் நூல் நூற்கும்படி செய்தல்.
(k) சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்தல்.
(l) 'Census' ஜன கணிதம் கொடுக்கக்கூடாது என்று 1931ல் பிரசாரம் செய்தது.

முதலியவைகளில் எதை சாதித்தது?

இப்படிக்கு,
சென்னை அஸெம்ப்ளி ஓட்டர்கள்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

சமஸ்தான மன்னர்கள் ஜமீன்தார்கள் முதலிய சுரண்டும் வர்க்கத்திற்கு எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்காமல் அவ்வர்க்கத்தை நசுக்கி விடவேண்டும். உழைக்கக் கூடிய வர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கான அவ்வளவு உழைக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் அவசியமானவைகளைக் கொடுக்கவேண்டும். கை மீது பொருளாதார வசதிகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும். தொழில்களை அடிப்படையாகக்கொண்டு வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளிக்க வேண்டும். ஜாதி மத இனங்களெதுவும் சர்க்காரில் இடம் பெறக்கூடாது."

3. சமதர்ம விளக்கத் தீர்மானம்.

பிரரேபித்தவர் புருஷோத்தமதிரிகம் தாஸ்.

"பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், கூட்டம் கூட சுதந்திரம் இவைகள் வேண்டும். தேசத்திற்கும், தொழிலாளர் நன்மைக்கும் விரோதமான சட்டங்களை ரத்து செய்துவிடவேண்டும். எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டதற்காக பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களையெல்லாம் திருப்பிக்கொடுத்து விட வேண்டும். ராணுவச் செலவைப்பாதிக்காவது குறைக்க வேண்டும். தொழிலாளரை அடிமைத் தனத்திலிருந்து விடுதலைசெய்ய வேண்டும். சங்கங்களமைத்து, யூனியன்களமைக்கவும், வேலைநிறுத்தங்கள் செய்யவும், மறியல் செய்யவும் உரிமை பெற வேண்டும். வாழ்க்கைக்கு வேண்டிய குறைந்த அளவுக்கு சம்பளத்தை நிர்ணயிக்கவேண்டும். வாரத்திற்கு 40மணியாக வேலை நேரத்தை ஏற்படுத்தவேண்டும். தொழிலாளர் வேலை வசதியை அதிகரிக்க வேண்டும்."

4. எதிர்காலயுத்த சம்மந்தமான தீர்மானம்.

(பிரேரகர் தோழர் மாசானி.)

"பிரிட்டன் இனி சம்பந்தப்படும் எந்த யுத்தங்களிலும் இந்தியா ஈடுபடுவதை எதிர்க்கவேண்டும். அத்தகைய யுத்தத்திற்கு இந்திய ஆட்களையும், பணத்தையும் உபயோகிப்பதை எதிர்க்க வேண்டும். அத்தகைய உதவியை இந்தியாவிற்கு சுயராஜ்யம் பெறும் வழியில் உபயோகிக்கவேண்டும்."

5. சுதேசமன்னராட்சி நீக்க தீர்மானம்.

(பிரேரகர் சி. கெ. நாராயணசாமி)

"இந்தியா முழுமைக்கும்பூரண சுயேட்சையிருப்பதை முன்னிட்டே சுதேச மன்னர்களாட்சியையும் சமஸ்தானங்களில் நீக்கி விடவேண்டும்."

6. சட்டசபைப்பிரவேச தீர்மானம்.

சமதர்மிகள் எதிர்ப்பு.

(பிரேரகர் தேஸ்பாண்டே)

"சமீபத்தில் காசியில் நிறைவேறிய முறையில் சட்டசபைப் பிரவேசத்தை எதிர்க்க வேண்டும்."

இத்தீர்மானத்தைப்பற்றிகமலாதேவி பேசுகையில் "கொள்கையைக் கவனிக்க வேண்டுமேயன்றி தனிப்பட்டவர்களைப்பற்றி கவனிக்கக் கூடாதென்றும், இந்திய சட்டசபையின் காங்கிரஸ் அபேட்சகர்கள் சமதர்மக் கொள்கையில் விருப்பம் கொண்டிருப்பவர்களாயிருந்தால் அவர்கள் இரண்டுக்கும் மத்தியில் மதில் மேல் பூனை போல் இருக்கமுடியாதென்றும், ஒரு பக்கத்தில் இறங்கித் தானாக வேண்டும்" என்றும் பேசினார்.

7. சமூகப்பிரச்சினை தீர்மானம்.

"இதுவரை சமூக சமரசம் செய்வதற்காக செய்யப்பட்டுள்ள முயற்சிகளெல்லாம் தவறான வழிகளில் அதாவது மதத்தின் பிரிவுகளின் பேரில் உரிமைகளளிக்க முயன்றிருப்பதாலேயே பயன் படாது போயிருக்கிறது. ஜனங்களுடைய பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட முயற்சிகளாகவிருக்க வேண்டும். சமூகத்தீர்ப்பை எதிர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தேசியக்கட்சியைக் கண்டிக்கின்றது. இக்கட்சி வீண் விவகாரத்தை வளர்த்து வருகிறதேயன்றி பொதுஜனங்களுக்குப் பிரயோஜனமில்லை"

8. காங்கிரஸ் ஸ்தாபனம் 'பதவி ஏற்கக்கூடாது. என்ற' தீர்மானம்,

"எங்கு தங்களுக்குப் பெரும்பான்மை பலமிருக்கிறதோ அந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில் சமதர்மிகள் காங்கிரஸ் நிர்வாக பதவிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது."

9. அதிகார அபகரிப்புத் தீர்மானம்.

"இந்தியாவின் அரசியலை இந்திய தேசியப் பிரதிநிதி சபையே அமைக்க வேண்டும். அதாவது இந்தியப் பிரதிநிதிகள் சபை பிரிட்டனுக்கும் இந்தியாவிற்கும் ஏற்படும் சமரசத்தினால் ஏற்படுவதாயிருக்கக் கூடாது. இந்திய பொதுஜனங்கள் சர்க்காரின் அதிகாரத்தைக்கைப்பற்றி வெற்றியும் பெற்றபிறகு ஏற்படும் பிரதிநிதிகள் சபையால் அமைக்கப்படவேண்டும்."

10. காங்கிரஸ் அமைப்புத் தீர்மானம்.

(பிரேரகர் தோழர் கௌதமர்.)

"காரிய கமிட்டியின் தற்கால அமைப்பு அப்படியே இருந்த போதிலும் தலைவர் ஸ்தானத்தை நீக்கிவிட வேண்டும். பிறகு மாற்றுவதற்குரிய தனி ஓட்டுரிமையின் பேரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியே காரியக்கமிட்டியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கொள்கையிலோ அல்லது வேலைமுறையிலோ மாற்றங்களைச் செய்யக் காரியக் கமிட்டிக்கு எத்தகைய அதிகாரமுமிருக்கக் கூடாது.

காங்கிரஸ் மகாநாட்டிற்கு பிரதிநிதிகள் தொகையை 2500 ஆகக் குறைத்து விடவேண்டும். கதர் விதியுடன் 4 அணா சந்தாவையும் எடுத்துவிடவேண்டும்."

11. காந்தி அறிக்கை கண்டனத் தீர்மானம்.

"மகாத்மா காந்தியின் அறிக்கை சம்பந்தமாகவும், காங்கிரஸிற்கு அவர் கூறியுள்ள யோசனைகள் சம்பந்தமாகவும் ஏற்படும் தனிப்பட்ட உணர்ச்சி சம்பந்தமான காரியங்களை பொதுஜனங்களின் மனதில் கிளப்பிவிட்டு காரியத்தைச் சாதித்துக்கொள்ளப் பெரும்பான்மையினர் காங்கிரஸில் அனுஷ்டிக்கும் தந்திரங்களை வெறுக்கிறது. சுதந்திரப்போராட்டத்தைப் பின் வாங்கும்படி செய்யவே இந்த முயற்சிகள் நடக்கின்றன."

12. தலைவர்கள் விடுதலைத் தீர்மானம்.

(தலைவர் பிரேரணை.)

"எம். என். ராயையும், பண்டித ஜவஹர்லால் நேருவையும் விடுதலை செய்யவேண்டும்."

நான் நாஸ்திகன் ஏன்?

சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது.

"நான் நாஸ்திகன்வன்" என்று தோழர் பகத்சிங்கவர்களால்எழுதப்பட்ட வியாசம் அடங்கியபுஸ்தகம்சென்னைஅரசாங்கத்தாரால்பறிமுதல் செய்யப்பட்டு விட்டதால் கைவசமிருக்கும் புத்தகங்கள் போலீசார் வசம் ஒப்புவிக்கப்பட்டு விடும்.

ஆதலால் இனி ஷை புத்தகம் நம்மிடம் கிடைக்காதென்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஈ. வே. கிருஷ்ணசாமி.
புரப்ரைட்டர்
உண்மைவிளக்கம் பிரஸ்.

அடுத்தவாரம்.

இவ்வாரப்பத்திரிகையில் கீழ்கண்டவிஷயங்களைப்பிரசுரிக்க இடமில்லாதலால் அடுத்தவாரம் வெளிவரும். அவைகள் வருமாறு:— சுக்கில நத்தம் சுயமரியாதைத்திருமணம், ஈரோடு ஆதிதிராடர்பொதுக்கூட்டம், தீபாவளியைப்பற்றி சென்னை தோழர் கல்யாணசுந்தரம் எழுதியது, சென்னைபகுத்தறிவு சங்கத்திறப்புவிழாவிஷயம், திருநெல்வேலி ஜில்லா விஸ்வகர்ம முதலாவது மகாநாட்டின் அறிக்கை, திருப்பூரில் நாயுடுவுக்கு ஆதரவு, துங்கநகர் எம். அட்டியண்ண கவுண்டர் எழுதிய பாட்டு முதலியவைகளாகும்.

திருவாரூர்.

ப்ரீதிங்கர்ஸ் அசோஷியேஷன்.

18-10-34 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்குஷைசங்கத்தின் மாதாந்திர கூட்டமொன்று தோழர் எஸ். பி. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுகாலை. தலைவர் முன்னுரையாக இனி நமது கடமை என்னஎன்பதுபற்றி மிகதெளிவாக பேசிய பின்னர் தோழர்கள் வி.ஜி.ஆர்.ராஜு டி. என். லெட்சி அவர்கள் இந்தியா சட்டசபை தேர்தலும். நமது கடமையும் என்பதைப்பற்றியும சென்னையிலிருந்து வந்த தோழர் தங்கவேல் அவர்களும்தோழர்ஆர்.ராஜசந்தானம் அவர்களும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்பதைப்பற்றியும்விரிவாகவும் அழகாகவும் சொற்பொழிவு ஆற்றினார்கள் பின் சில தீர்மானங்கள் நிறைவேறியபின்கூட்டம் கலைந்தது.

தோழர் டி. ஆர். வேணுகோபால் செட்டியார் அறிக்கை.

இந்திய சட்டசபைத் தேர்தல். 10—11—1934.

கனவான்களே! சீமாட்டிகளே!!

இந்திய சட்டசபையின் தஞ்சை திருச்சி ஜில்லாக்களின் மகமதியரல்லாதார் தொகுதியின் பிரதிநிதி ஸ்தானத்திற்கு நான் ஒரு அபேக்ஷகனாக இருக்கிறேனென்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் திருச்சினாப்பள்ளி முனிஸிபாலிட்டியில்ஆறுவருடம் துடர்ச்சியாக கவுன்சிலராயிருந்து பல நன்மைகள்பொது ஜனங்களுக்கு செய்திருக்கிறேன். சமீபத்தில் திருச்சிஜில்லா தேவஸ்தான கமிட்டிக்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். நான் அதைச் செய்வேன் இதைச்செய்வேன் என்று வீண் சொல் சொல்லிக் கொள்ளாமல் பொதுவாக ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் நன்மைகளைச்செய்ய பல வழிகளிலும் முயற்சியெடுத்துக் கொள்வேனென்று உறுதியாகச் சொல்லுகிறேன். நான் தங்களை கூடிய சீக்கிரத்தில் நேரில் பார்க்கிறேன். அவ்விதம் பார்க்க முடியாமல் போனால் அதற்காக என்னைமன்னித்து நவம்பர்-மீ 10-உ ஓட்போடு மிடத்திற்குச் சென்று தங்களுடைய ஓட்டை எனக்கு பதிவுசெய்து வரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சர்தார் வீழ்க"

"ஹிட்லர் ஆகப்போகும் சர்தார் வல்லபபாய் பட்டேல் வீழ்க" என்றதலைப்புடன் துண்டுப் பிரசுரங்களை வினியோகம் செய்தனர். மகாத்மா காந்திவிலகவேண்டு மென்பதை அப்பிரசுரங்களில் வற்புறுத்தியு மிருந்தனர்.

மணமகள் தேவை.

26வயதுடையவரும் மாதம் 40 ரூக்கு மேல் வரும்படி உள்ளவருமான ஒருவருக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த 20 வயதிற்குள்பட்ட அழகிய பெண்தேவை. விதவையாயினும் சரி. கடிதம் பத்திரப்படுத்தப்படும்.

ப வ. விநயக மூர்த்தி.
காரியதரிசி சுயமரியாதை:சங்கம்
கிழக்கு வெளிவீதி மதுரை.

உலக தேச சரித்திரச் சுருக்கம்.

A Short History of the World.

by
H. G. Wells.
(மொழிபெயர்ப்பாளர் சி. வீ. கே.)

அத்தியாயம் 2.

நமது உலகத்தின் பூர்வ வாலாறுகளைப் பற்றிக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக விஞ்ஞானிகளால் பலதிறப்பட்ட கோட்பாடுகளுடன் நன்மையான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு அதன் சுருக்கங்களைக்காண்பிக்க நமக்குச் சாத்தியமில்லை. ஏனெனில் அவைகளில் மிக மிக உன்னத மானபுள்ளி விபரங்களும், பிரகிருதி ருசுக்களும் நிறைந்து இருக்கின்றன. இதைப் பற்றி நாம் நமது கற்பனைகளை செலுத்தப் போதிய அவகாசமில்லை. பிரகிருதி ஞான சாஸ்திர சம்பந்தமான தத்துவங்களில் இன்னும் பல வற்றை நாம் தெரிந்து கொள்ளவில்லை. பொதுவாக நாம் நமது கோளத்தின் வயதை நீடித்துக்கொண்டு போவதாயிருக்கின்றது. இப்பொழுது நமது உலகம் சொந்தமற்ற நீடிப்பை, சுழலும் கோளமாக உடைத்தாய்ப் பெற்று சூரியனைச் சுற்றிச் சுற்றி நீண்டகாலமாக அதாவது இருநூறுகோடி வருடங்களாக வருகிறதாகத் தெரிகிறது. ஒருக்கால் இதைவிடக்கூடுதலாகவும் இருக்கக் கூடும். இது நம்முடைய நினைப்பை வென்று விடக்கூடிய சமயமாயிருக்கிறது!

தனித்தனி பிரிவதற்கு முன், சூரியனும், பூமியும் இதர கிரகங்களும் ஒரு வெளியில் குழம்பினபதார்த்தமாய் சுழன்று கொண்டே இருந்திருக்க வேண்டும். தூரதிருஷ்டிக் கண்ணாடி, நமக்கு ஆகாயத்தில் பலவித புரிபோன்ற (Spiral) முருக்குள்ள மேகங்களைப் போன்று திகழும் ஒரு அமைப்பைக் காண்பிக்கிறது. புரிபோன்ற வெண்படலம்ஒரு மத்தியில் சுழலுவதாகத் தெரிகிறது. பலவானசாஸ்திரிகளால் சூரியனும் அதன் கிரகங்களும் வெவ்வேறு தோற்றங்களோடு இருந்த தென்று யூகிக்கப்படுகிறது. இவைகள் திறுகுபோன்றிருந்தூற்றில் இன்றுள்ள நிலைமையை எய்தியது என நிர்மாணிக்கப்படுகின்றன. இந்த நீடிப்புகள் அகன்று கொண்டேயிருந்ததெனவும், அதுபோது உலகமும், அதன் சந்திரனும் உற்பத்தியானதென்றும் தெரியவருகிறது. இப்பொழுது பூமிசுற்றுவருவதைப் பார்க்கிலும் ஆரம்பத்தில் பூமி சூரியனை அதிவேகமாகச்சுற்றினதாம். பூமியானது சூரியனிலிருந்து குறைந்த தூரத்திலிருந்ததாம். பூமியின் மேல்தளத்தில் கொடுங்கனல் அல்லது உருக்குப்போன்ற பதார்த்தமிருந்ததாம்! ஆகாயத்தில் சூரியன் ஒரு பெருத்த எரி நெருப்பாக இருந்ததாம்.

(தொடரும்)

காங்கிரஸ் மீது கண்டனம்.

தொழிலாளர் தலைவர்கள் விளக்கம்.

சுயேச்சை சங்கக் கூட்டம்.

20ந்தேதிமாலை இந்திய சுயேச்சை சங்கத்தின்சார்பில், பம்பாயில்பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. தோழர் மணிபென் காரா தலைமை வகித்தார். அவர் தமது பிரசங்கத்தில் காங்கிரஸ் வேலைத் திட்டத்தைப் பலமாக கண்டித்தார். மகாத்மா காந்தியின் அறிக்கையில் கண்டுள்ள யோசனைகள் மிக்க பிற்போக்கானவையென்றும், ஜனநாயக ஆட்சிமுறைக்கு விரோதமானவையென்றும் வற்புறுத்தினார்.

இந்திய தொழிலாளர் சங்கக் காங்கிரஸ் தலைவரான தோழர் ஹரிநாத சாஸ்திரி கூறியதாவது:—"காங்கிரஸ் வேலைத்திட்டத்திற்கும், மிதவாதிகள் பெடரேஷன் வேலைத் திட்டத்திற்கும் வித்தியாசமே இல்லை. ஏகாதிபத்திய கோஷ்டியினரிடமிருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிதொழிலாளர்கள், விவவாயிகள் இவர்கள் வசம் மாற்ற வேண்டும்."

பெண் மாஜிஸ்டிரேட்டுகள் லட்சுமணபுரியில்நியமனம்.

இம்மாகாண சரித்திரத்திலேயே முதன் முறையாக 22ந் தேதியன்று பெண்களை பெஞ்சு மாஜிஸ்டி ரேட்டுகளாக நியமனம் செய்யப்போகின்றனர். அம் மாஜிஸ்டிரேட்டுகள், குற்றங்கள் சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்வார்கள். பெண் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முதலில் 2-வது வகுப்பு மாஜிஸ்டிரேட் அதிகாரம் வழங்கு வார்கள்.

—அ. பிரஸ்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் அவ்வறிக்கையிலுள்ள ஒவ்வொரு பிரிவையும் நான் தனித்தனியாகக் கண்டித்துக் கூறியிருக்கிறேன். சர்க்கார் அறிக்கையிலுள்ள யோசனைகள் போதாதென்ற என்னுடைய அபிப்பிராயமானது இன்று அதிக பலமடைந்திருக்கிறதேயொழிய பலம் குன்றிவிடவில்லை. அப்படியிருந்தும் சர்க்கார் அறிக்கையை நான் புகழ்ந்ததாக தோழர் சத்தியமூர்த்தி கூறுகிறார். தோழர் சத்தியமூர்த்தி கண்ணியமும், கௌரவமுமுள்ளவர் (சிரிப்பு) "நாய்கள் குலைத்துக்கொண்டிருக்கட்டும்; பொதிமாடு போய்க்கொண்டுதானிருக்கும்" என சர். சாமுவல்ஹோர் கர்வத்துடன் கூறியதற்கு தோழர் ஷண்முகம் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுமுன் இந்தியா சட்டசபையில் அளித்த பதில் பொன்னே போல் போற்றத்தக்கதாகும். அவ்விதம் சர்க்காரை நாங்கள் எவ்வளவோ கண்டித்துப் பேசியும், நாங்கள் சர்க்கார் பேர்வழிகளென துவேஷப் பிரசாரம் செய்து வருகிறார்கள், நான் சர்க்காரை கண்டித்துப் பேசியதை 'ஹிந்து' பத்திரிகையின் விசேஷ நிருபரே புகழ்ந்து எழுதியுள்ளார். ஒரு வேளை இவ்விதம் இப்போது தேர்தல் நடைபெறுமென அவருக்குத் தெரிந்திருந்தால், அவர் அவ்வாறு என்னைப் புகழ்ந்து கூறியிருக்கமாட்டார் (சிரிப்பு) தோழர் சத்தியமூர்த்தி என் மீது கூறிய புகார்களை 'ஹிந்து' பத்திரிகை எவ்விதம் பூரணமாகப் பிரசுரித்திருந்ததோ, அது போல் எனது பிரசங்கத்தையும் பாரபட்சமின்றி பூரணமாகப் பிரசுரிக்குமென நம்புகிறேன்.

3வது 'குற்றம்'

1933ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1ந் தேதி நான் இந்தியா சட்டசபையில் பிரசன்னமாகியிருந்தும், சிறையிலிருந்த மகாத்மா காந்தியையும், தோழர் மங்டி கிதாயதுல்லா முதலிய மற்ற தலைவர்களையும் விடுதலை செய்வதை ஆதரித்து நான் ஓட்டுக் கொடுக்கவில்லையென்பது என் மீது சுமத்தப் பெற்றுள்ள 3வது குற்றமாகும். உண்மையென்னவெனில் அத்தீர்மானத்தையொட்டிய விவாதம் அன்றைய தேதியில் முடிவடையவில்லை. ஷை தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் எனது நண்பரான தோழர் மாஸ்வுத் அகமது தான். அத்தீர்மானத்தையொட்டி பின்னர் ஆகஸ்டு மீ 31ந் தேதி விவாதம் ஆரம்பமாயிற்று. ஆனால் அதற்குள் மகாத்மா காந்தி விடுதலையடைந்து விட்டதால், அத்தீர்மானத்தை தோழர் மாஸ்உத் அகமது வாபஸ் செய்து கொண்டார். அன்று நான் இங்கிலாந்தில் ரிசர்வ் பாங்கி கமிட்டி, ரயில்வே கமிட்டி இவைகளின் அலுவல்களை கவனித்து வந்தேன்! ஆனால் எதை ஆதாரமாகக்கொண்டு என் மீது அவ்விதம் புகார் கூறியிருக்கிறார்களோ தெரியவில்லை.

4வது 'குற்றம்'

லோதியன் கமிட்டி அங்கத்தினர் என்ற ஹோதாவில் மாகாண சட்டசபைகளின் வாக்காளர்களின் மனைவிகளுக்கு ஓட்டுரிமையளிப்பதையும், கல்வி அந்தஸ்து உரிமையையும் நான் ஆதரித்ததாயும், ஆனால் சென்னை கார்ப்பொரேஷனில் அத்தகைய உரிமைகளுக்கு விரோதமாக ஓட்டுக் கொடுத்ததாயும் குறிப்பிட்டிருப்பதுதான் என்மீதுள்ள 4வது குற்றமாகும். அத்தகைய தீர்மானத்திற்கு விரோதமாக நான் ஓட்டுக் கொடுக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக நான் என்ன கூறினேனென்றால், அவ்விஷயத்தில் எனது கட்சியினருடைய அபிப்பிராயத்தை நான் ஆதரிக்கவில்லையென்றும், லோதியன் கமிட்டி யோசனைகளை நான் ஆதரிப்பதாயும் கார்ப்பொரேஷன் சம்பந்தப்பட்ட வரையில் அந்த யோசனைகளையே நான் ஆதரிப்பதாயும் கூறினேன். எனவே ஷை புகாரும் ஆதாரமற்றதாகும்.

5வது 'குற்றம்'

1933ம் வருஷம் மார்ச்சு மாதம் 23ந் தேதி நான் இந்தியா சட்டசபையில் ஆஜராகியிருந்தும், வருமான வரி விகிதத்தைக் குறைப்பதை ஆதரித்து நான் ஓட்டுக் கொடுக்கவில்லையென்று என்மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இந்த புகாரும் பொய்தான். வருமான வரியைக் குறைக்க வேண்டுமென, கொண்டுவந்த திருத்தத்தை ஆதரித்தும், சர்க்கார் தீர்மானத்தை எதிர்த்துமே நான் ஓட்டுக் கொடுத்திருக்கிறேன். ஆனால் முக்கியமான பெரிய திருத்தமொன்றை ஆதரித்து நான் ஓட்டுக் கொடுத்து விட்டதால், சிறிய திருத்தத்திற்கு நான் ஓட்டுக்கொடுக்கவில்லை.

6வது 'குற்றம்'

தபால் விகிதங்களைக் குறைப்பதை ஆதரித்து நான் ஓட்டுக்கொடுக்கவில்லையென்பது 6வது புகாராகும். அச்சமயம் நான் சட்டசபையில் இருந்தேனா அல்லது இல்லையாவென்பது எனக்கு ஞாபகத்திலில்லை. ஆனால் 1934ம் வருஷம் மார்ச்சு மாதம் 27ந் தேதி ஷை விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்ற அதே தீர்மானம் யோசனைக்கு வந்தபோது, நான் அதை ஆதரித்தே பேசினேன்!

7வது 'குற்றம்'

1933ம் வருஷம் ஏப்ரல் மீ 5ம் தேதி கிரிமினல் சட்ட திருத்த மசோதாவை சர்க்கார் கொண்டுவந்தபோது நான் ஒன்று அச்சமயம் சபையில் ஆஜராகாமலிருந்திருக்க வேண்டும்; அல்லது ஓட்டுக் கொடுக்காமலிருந்திருக்க வேண்டுமென்பதும், அதை எனது கட்சித் தலைவர் எதிர்த்திருக்கிறாரென்பதும், மற்றோர் குற்றச்சாட்டாகும். அம்மசோதா யோசனைக்கு வந்த தினத்தன்று மாலை நான் சட்ட சபைக்குச்செல்லவில்லையென்பது உண்மையே. அன்றைய தினத்திலிருந்து அடுத்த ஒருவாரம் வரை நான் சட்டசபைக்குச் செல்லவில்லை. எனது உடம்பு அசௌகரியமே அதற்குக் காரணமாகும். அவ்வமயம் சர். ஷண்முகம் அவர்களுக்கு எனது நண்பர்கள் அளித்த விருந்திற்குக் கூட நான் செல்ல முடியவில்லை. நான் மானிடருக்குள்ள இயற்கையான கஷ்டங்களுக்கு உட்பட்டவனே. நோயற்று வாழும் தெய்வீகசக்தி என்னிடமில்லை!

(சிரிப்பு)

8வது 'குற்றம்'

இந்திய ஜவுளித் தீர்வை திருத்த மசோதாவை எனது கட்சித் தலைவர் கடுமையாக எதிர்த்தும், நான் அதை 1934ம் வருஷம் ஏப்ரல் மாதம் 16ந் தேதி ஆதரித்து ஓட்டுக் கொடுத்தேனென ஓர் புகார்கூறியிருக்கிறார். நான் இதுவரை இந்தியா சட்டசபையில் 2 அல்லது 3 தடவைகள் சர்க்கார் பக்கத்தில் ஓட்டுக் கொடுத்திருக்கிறேன். அதிலிருந்து நான் சர்க்காரை ஆதரித்தேனெனக் கூறிவிடமுடியாது. அவ்விஷயத்தில் எனக்குள்ள உண்மையான அபிப்பிராயபேதமே காரணமாகும். அதன் சம்பந்தமாக ஆமதாபாத் மில் சொந்தக்காரர்களுக்கும், பம்பாய் மில் சொந்தக்காரர்களுக்கும் அவ்விதமே அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. அப்படியிருக்க, தேசத்திற்கு விரோதமாக நான் சர்க்காரை ஆதரித்து ஓட்டுக் கொடுத்து விடவில்லை.

9வது 'குற்றம்'

சமுதாய சீர்திருத்த சட்ட விஷயத்தில் தற்போதுள்ள எனது நிலைமையும், இதற்குமுன் நான் கூறிய விஷயங்களும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றனவென்பது அடுத்தபடியான புகாராகும். அதற்கு காரணம் காங்கிரஸ் செய்த கிளர்ச்சியே என்பது எனது அபிப்பிராயமாகும். அவர்களுடைய கிளர்ச்சியின் மூலமேயே, சமூக சீர்திருத்த சட்ட விஷயத்தில் பொது ஜனங்களின் எதிர்ப்பு இருந்து வருகிறதென்பதை நான் உணர்ந்து கொண்டேன். எனவே, பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாக நடந்து கொள்ள நான் விரும்ப வில்லை.

10வது குற்றம்.

நான் அரசியல் சமய சஞ்சீவியென்பதும், எனக்கு கொள்கையோ திட்டமோ எதுவும் கிடையாதென்பதும் 'குற்றப் பத்திரிகை' யிலுள்ள 10வது விஷயமாகும். இதைக் காட்டிலும் பழிச்சொல்லொன்றுமே இருக்க முடியாது. சென்ற 20வருஷகாலமாக நான் அரசியல் துறையிலிருந்து வருகிறேன். இதுவரை நான் என்ன சௌகரியங்களை அடைந்திருக்கிறேனென்பது உங்களுக்குத் தெரியும். நான் செய்து வந்துள்ள அலுவல்களும் நீங்களறிந்த விஷயங்களேயாகும். இந்த புகாருக்கு சரியான விடையளிக்க வேண்டியது வாக்காளர்களின் கடமையாகும்.

11வது 'குற்றம்'

இந்தியாவிற்குடனேசுயராஜ்யம். கிடைப்பதில் எனக்கு நம்பிக்கையில்லையென்பது அடுத்த குற்றச் சாட்டாகும். அடுத்த வருஷத்திலோ அல்லது நவம்பர் 11ந் தேதி தேர்தல் முடிந்ததுமோ சுயராஜ்யம் கிடைத்து விடப் போகிறதென தோழர் சத்தியமூர்த்தி யோக்கியப் பொறுப்புடன் கூறமுடியுமா?

12வது 'குற்றம்'

எனது கட்சியினர் காங்கிரசை எதிர்த்துப் போராடியதால் லண்டன் மகாநாட்டில் நான்பெருமை படுத்திக் கொண்டேனென்பது அடுத்த கூற்றாகும். அப்புகார் சுத்தப்பொய். நான் ஓர் சமயத்திலாவது காங்கிரசையோ, தேசத்தையோ எதிர்த்துப் பேசியதே கிடையாது. ஜினிவாவிலும், டொரால் டோவிலும் மகாத்மாவையும், காங்கிரசையும் நான்புகழ்ந்தேபேசியுள்ளேன். நமக்குள்ளவேற்றுமையை நான் அன்னிய தேசத்தாரிடம் ஓர்போதும் காட்டிக் கொடுத்ததில்லை.

லண்டன் மகாநாட்டிற்கு வந்த சர். தேஜ்பகதூர் சாப்ரூ, தோழர் ஸ்ரீனிவாசசாஸ்திரி முதலிய சகலரும் இதை ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் காங்கிரஸ் வாதிகள்மாத்திரம் ஜஸ்டிஸ் கட்சியை இழிவாகக்கூற ஓர்போதும் பின் தாங்கியதில்லை. சில வருஷங்களுக்கு முன் நானும், தோழர் சத்தியமூர்த்தியும் இங்கிலாந்திலிருந்தபோது, இந்தியர்களுக்கு தங்கள் நிர்வாகத்தைத் தாங்களேவகிக்க சாமார்த்தியமுண்டென நான் "மார்னிங்போஸ்ட்" பத்திரிகையில் எழுதியிருந்தேன். ஆனால், அதை தோழர் சத்தியமூர்த்தி மறந்து மறுநாள் ஜஸ்டிஸ் கட்சியை இழிவாகக் கூறி ஓர் கடிதம் அனுப்பி விட்டார்.

'உண்மையை மறைப்பது பொய்க்கற்பனை'

தோழர் சத்திய மூர்த்தியும், காங்கிரஸ் நண்பர்களும் உண்மைகளை மறைத்தும், பொய்களை கற்பனை செய்துமே வருகிறார்கள். தோழர் சத்திய மூர்த்தி போன்றவர்களாலேயே பிராமணர்களுக்கும், பிராமணரல்லாதாருக்கும் துவேஷமேற்பட்டு வருகிறது. அவருடைய துவேஷத்தினால் தான் ஷை உணர்ச்சி அடங்காமலிருந்து வருகிறது. பிராமணரல்லாதாரான நானும், சர். ஷண்முகம் அவர்களும்தான் பிராமணரல்லாதாருக்கு பெருமையாக இந்தியா சட்ட சபையில் விளங்க முடிந்திருக்கிறது. எனவே, பிராமணரல்லாதார் என் விஷயத்தில் பெருந் தன்மையுடன் அவர்களுடைய கடமையைச் செய்ய வேண்டியது அவசியமாகும். பிராமணர்களுடைய குறைகளையும் நான் கேட்டு நிவர்த்தித்திருக்கிறேன். எனவே, நான் எனது கடமையை சரிவரச் செய்திருக்கிறேனென நினைக்கும் பட்சத்தில் எனக்கு ஓட்டுக் கொடுக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளு

கிறேன். (கரகோஷம்)

வீண் புரளி.

நீதக, டாக்டர். வி நடேசமுதலியார் எனக்கு உதவி செய்யவில்லையென ஓர் வதந்தி உலாவி வருகிறது. அதை எவரும் நம்பவேண்டாம். இத்தேர்தலில் எனக்கு உதவிசெய்வதாக அவர் உறுதிகூறியிருக்கிருர்.

ஒருவர்:...கார்ப்போரேஷன் மேயர் தேர்தலில் நீங்கள் அவரை என் கைவிட்டு விட்டீர்கள்?

தோழர் முதலியார்:— நான் அவரை ஓர் போதும் கைவிடவில்லை. இதை டாக்டர் நடேச முதலியாரே ஒப்புக் கொள்ளுவார்.

கடைசியாக தோழர் ராமசாமி அவர்கள் தோழர் ராமசாமி முதலியாரை ஆதரித்தும், அவருக்கு எல்லோரும் ஓட்டுக்கொடுக்க வேண்டுமென்றும் கூறியபின் இரவு 8-30 மணிக்கு கூட்டம் கலைந்தது.

இக்கூட்டத்தில் சுமார் 5000 பேர்களுக்கு மேலாகவே காணப்பட்டார்கள். 16 காஸ் விளக்குகள் போட்டும் ஜனக்கூட்டம் முழுவதும் தெரியவில்லை.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ரைக்கண்டு நீண்ட நேரம் பேசினேன். மார்ஷாக் என்பவர் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் வேண்டிய புத்தகங்கள் இயற்றுவதில் மிகச் சமர்த்தர். அவர் புத்தகங்கள் முழுவதிலும் ஹாஸ்யரசம் பாய்ந்திருக்கும். ரஷியர்கள் தங்களுடைய சிறுவர்களுக்காக ஒன்றிரண்டு வருட அனுபந்தங்களையும் தயாரித்திருக்கின்றனர். குழந்தைகள் வாசிப்பதற்கென்று 'எங்க்யோக்ராப்ட்' 'எங்க்ரேடியோ' என்னும் இது போன்ற பெயர்களுடன் கணக்கற்ற பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. சரித்திரக்கதைகள் நிறைந்த புத்தகங்கள் அநேகம் வெளிவந்துள்ளன. அவைகளில் பெரும்பாலும் போர்வீரர்களைப் பற்றிய கதைகளே காணப்படுகின்றன.

இலக்கியங்களையும் பழைய புராணங்களையும் படிப்பதிலேயே சிரத்தை காட்டிவந்த ரஷியர்கள் இப்போது தற்கால நாவல்கள் படிப்பதில் அளவு கடந்த சிரத்தை காட்டுகிருர்கள். புத்தகக் கடைகள் எண்ணிக்கையற்றன. எங்கு பார்த்தாலும் புத்தகக்கடைகள்தான். சில சமயங்களில் புத்தகக் கடைகளில் புத்தகங்கள் யாவுமின்றி கடை காலியாய்ப்போய் விடுவதுமுண்டு. 20 ஆயிரம் புதிய நாவல் பிரதிகள் பிரசுரமான அன்றைய தினமே விற்றுப் போய்விடுகின்றன.

ஒரு நாளில் குழந்தைகளுக்கான புத்தகங்கள் பிரம்மாண்டமான எண்ணிக்கையில் விற்பனையாகின்றன.

மாஸ்கோவில் எங்கு பார்ப்பினும் பெரிய மாறுதலாகவே காணப்பட்டது. எங்கு பார்த்தாலும் குதூகலத்தையே கண்டேன்".

திருமலைச்சேரி

ஆதி திராவிடர்களின் துயரம்,

சென்ற 6 வருஷ காலமாக காருண்ய லேபர் கவர்ன்மெண்டார் ஆதி திராவிடர்களுக்கு 1928-ம் ஆண்டில் ஏற்படுத்தியசாத்தம்பாக்கம்வில்லேஜ் S. No. 432. 2. A. O. 96. செண்டு புறம்போக்கு பூமி சுடுகாட்டில் ஷை தாழ்த்தப்பட்ட மக்கள் 28-7-33ல் ஒரு பிரேதத்தைக்கொண்டு போய் அதில் வைத்து அடக்கம் செய்தார்கள்.

ஷை திருமலைச்சேரி கிராம இந்துக்களும், தாலூகா போர்டு மெம்பர் ஒருவரும் ஷை ஆதி திராவிடர்களின் மீது வீண் பொருமை வைத்துக்கொண்டு ஷை தாலூகா போர்டு பிரசிடெண்டுக்கு ரிப்போர்ட்டு எழுதினர்கள்.

ஷை தாலூகா போர்டு தலைவர் ஷை இந்துக்கள் பேச்சைக் கேட்டு (144) செக்ஷன் பிரகாரம் கோர்ட்டு மூலியமாக இந்த ஏழைகளை அவமானம் செய்யலாமென்று யோசனை செய்தார். அது முதல் கொண்டு தாலூகா போர்டு எடுத்து விட்டபடியால் யாதொரு வழியுமில்லாமலிருந்தது.

எங்கள் குல நலம் பேணுபவராகிய வடஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் முனிஸிபல் கவுன்சிலர் தோழர் எ. பி. பெரியசாமி புலவர் அவர்களுக்கு ஷை குடிகள் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அன்னவர் திருமலைச்சேரிக்கு விஜயம் செய்து ஷை தாழ்த்தப்பட்ட குடிகளின் துன்பத்தைக் கேட்டு கனம் தங்கிய வடஆற்காடு ஜில்லா கலெக்டர் துரை அவர்களுக்கு லைசன்ஸுக்காக மனுக்கள்செய்துகொண்டார். ஷை ஜில்லா கலெக்டர் துரை அவர்கள் இந்த ஏழை ஆதிதிராவிடக் குடிகளின் பேரில் கிருபை கூர்ந்து D. Dits 6608. No 1928-ம் வருஷத்தில்அங்கீகாரம் செய்து இருந்த ஷை S. 432 No மயானமாக மாற்றப்பட்டிருக்கிறது என்றும் நீங்கள் ஷை இடத்திற்கு சவம் கொண்டுபோய் அடக்கம் செய்யலாமென்றும் ஜில்லாகலெக்டர் துரை அவர்கள் 30-6-34ல் அங்கீகாரம் செய்து ஷை சுடுகாட்டுக்கு லைசன்ஸு கொடுத்து விட்டார்.

பூண்டி போஸ்டு ஆபீஸ் அக்ரகாரத்திலிருப்பதால் 2 பர்லாங்கு தூரத்திலிருந்து நாங்கள் கத்திக்கொண்டு அழைத்தாலும் கவர்ன்மெண்டு கடிதம் வாங்கவும், லெட்டர் கொடுக்கவும் பெரிய கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது. ஏழை மக்களுக்கு அன்னிய தேசத்திலிருந்து மணியார்டர் வந்தால் ஷை பூண்டி போஸ்டாபீசிலுள்ள சிப்பந்திகள் 2 அணு அல்லது 3 அணு கொடுத்தால் தான் பணம் கொடுக்கிருர்கள். இதை மேலதிகாரிகள் கவனிக்கவேண்டுமென்று ஷையூர் ஆதிதிராவிடக் குடிகள் எழுதுகிருர்கள்.

மணமகன் தேவை.

20-வயதுடையவரும், 4-வகுப்பு வரை பயின்றவரும், ரெட்டியார் வகுப்பைச் சேர்ந்தவரும், செகப்பு நிறமும், தக்க உடலமைப்புமுடைய அழகிய பால்ய விதவைக்கு மணமகன் தேவை.

மணமகன்:—30- வயதிற்குட்பட்டவரும், படித்து உத்தியோகத்திலோ அல்லது வியாபாரத்திலோ மாதம் ரூ 30-0-0 சம்பாத்திய முடையவரும், பூஸ்திதி உடையவருமான நாயுடு, வேளாளர், செட்டியார், ரெட்டியார், முதலியார் ஆகிய வகுப்பைச்சேர்ந்தவரும், திடகாத்திர சரீரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விருப்பம் உள்ளவர்கள் அடியில் கண்ட விலாசதாருக்கு 0-1-3 தபால் தலையுடன் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

ச.ம.சி. பரமசிவம்.

த.நா.பு.ம. சங்கம், காரியதரிசி

22, பாளையம் பஜார் உறையூர் p.o.

திருச்சி.

நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை.

(ஒரு நவீன நாடகம்.)

ஆக்கியோன்:

தோழர் சி. எ. அய்யாமுத்து அவர்கள்.

இதன் விலை அணு 8.

முன்பணம் அனுப்பவும். வி. பி. இல்லை.

தபாற் செலவு இனம்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

பெண்களுக்கோர் வார்த்தை.

சூதக வயிற்றுவலி, சூதக வாய்வு, சூதக கட்டி முதலிய சூதக சம்பந்தமான சகலநோய்களுக்கும்

கல்லுப்பு செந்தூரம்.

இம் மருந்தில் அமைந்திருக்கும் ஆச்சரியமான குணத்தை இதைச் சாப்பிட்ட பெண்மணிகளுக்கே நன்கு விளங்கும்.

புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இம்மருந்தை ஆயிரக்கணக்கான பெண்மணிகளுக்குக் கொடுத்து குணமடைந்ததைநேரில் பார்த்து இந்தப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டது. மாதவிடாய் காலங்களிலுண்டாகும் சூதக வாய்வு, வயிற்றுவலி, சூதகக் கட்டி, சரியாய் விலக்கமாகாதிருத்தல், மாதவிடாய் சரியில்லாமல் கரித்தண்ணீர் போலும், சீழுனித் தண்ணீர்போலும், கதங்கலாயும், ஒரு நாளிரண்டு நாள் மட்டும் சொற்பமாய் காணுதல், மறுபடியில்லாதிருத்தல் 10 நாள் 8 நாள் முன் பின்னுகக் காணுதல் முதலிய சகல வியாதிகளையும் குணப்படுத்தி புத்திர சந்தானத்தைக்கொடுப்பதில் இதற்கு மிஞ்சிய மருந்தே கிடையாது. அனுபவத்தில் கைகண்ட மருந்து. சூதகக்கட்டிகளுக்காக ஆப்ரேஷன் செய்ய வேண்டியதில்லை. மருந்து சாப்பிடும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

விலை புட்டி 1-க்கு ரூ 3—0—0

குறிப்பு:— நமதிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டு வாசிகள் மருந்துக்கு ரூபாய் 3ம் வி. பி. சிலவு ரூ 2-ம் ஆக ரூபாய் 5-ம் முன் பணமாய் அனுப்பவேண்டும்.

அரண்மனை வைத்தியர்

S. T. மாணிக்கம் பிள்ளை,

சித்த வைத்தியசாலை,

ஊத்துக்குளி ரோடு, திருப்பூர். கோயம்புத்தூர் ஜில்லா.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொள்வதால் பருத்திக்கு மார்கட்டில் பிரியம் ஏற்படும். அதனால் விலை கூடி அதிகமானலாபம் பெறலாம், இன்னும் பாதி தொழிலாளிகள் வேலையில்லாமல் வீட்டுக்குப் போய் விடுவார்கள் இதனால் எல்வளவோமிச்சமிருக்கும் என்பவைகளை கருதித்தான் முதலாளிகள் பருத்திச் பாகுபடியை முன்னையதைவிட பாதியளவுசாகுபடி செய்வதற்குத்தீர்மானித்துக் கொண்டார்கள். முதலாளிகள் லாபத்தை பிரதானமாகக் கருதி பருத்திச் சாகுபடியை கட்டுப்படுத்துகிறார்கள். ஆனால்உலகில் அநந்த கோடிமக்கள் உடுக்க ஆடைகிடைக்காமல் அழுக்குக்கந்தைகளைக் கட்டிக்கொண்டு அரை நிர்வாணமாக இருக்கிறார்கள்!

தங்கத்தால் நிறைந்த பொக்கிஷங்கள்.

உலகத்திலுள்ள அநேக தேசங்களில் கொடுக்கல் வாங்கல் செய்வது, நோட்டுக்கள் அச்சிடுவது, செல்வத்தை நிர்ணயிப்பது முதலியவைகள் தங்கத்தின் மதிப்பைக் கொண்டுதான். சுமார் ஒருவருடகாலமாக மற்றதேசங்களிலிருந்ததங்கம் எல்லாம் அமெரிக்காவிற்குப் போய் சேர்ந்து கொண்டிருக்கின்றன! இப்போது நியூயார்க் பொக்கிஷத்திலிருக்கும் தங்கத்தின் பெருமதி 100கோடி தங்கப்பவுன் என்று சொல்லப் படுகின்றன. இத்துணை ஏராளமான தங்கம் ஐக்கியக்குடியரசு அமெரிக்கா பொக்கிஷத்தில் இருப்பதினால் அங்குள்ள சாதாரண பிரஜைகளுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை! இந்த தங்கக் குவியலுக்குச் சொந்தக்காரர்கள் முதலாளிகள் சிலரே!

உழைப்புக்கு உழைப்பை மாற்றிக் கொள்ளும் பண்டமாற்றுமுறைமாறியதினால்தான் உழைக்காத வீணர்கள் கூட்டம் உழைப்பாளிகளின் செல்வத்திற்குச் சொந்தக்காரர்களாகி பெருத்த பிரபுக்களானார்கள். (இதுதான் பண்டைக்கால மூதாதைகள் செய்துகொண்ட தவறுதலும், முதலாளித்துவம் ஏற்படுவதற்குக் காரணமும் என்று எண்ணுகிறேன்)முதலாளித்துவத்தின் மோசடிகளில்பிரதானமானஒன்றுதான் உழைப்பால்விளையும் செல்வத்தை தங்கத்தால் மதித்து, உழைப்பாளிகளின் செல்வத்தை திரட்டி தங்கத்திற்குட்படுத்தி வைத்துக் கொண்டிருப்பதும். உழைப்பே செல்வம், உழைப்பே விலை. ஆகையால்தங்கத்திற்கு விலையில்லை. (அதே போன்றுநவரத்தினங்களுக்கும் விலையில்லை) ஒருவன் தங்கச்சுரங்க மொன்றை இலேசாகக்கண்டுஅதிலிருந்து ராத்தல் கணக்கில் தங்கத்தை கொண்டுவந்தால் கோடிக்கணக்கான மக்களின் உழைப்பால் கிடைக்கும் செல்வத்தை அந்த ஒருவன் கொண்டுவந்ததங்கத்திற்கு ஒப்பிட்டுவாங்குவது எவ்வளவு பெரிய அக்கிரமம். சோஷியலிசப்படி அதாவது உழைப்பே செல்வம் என்னும் சத்தியப்படி பகுத்தறிவைக் கொண்டு பரிசீலனை செய்து பார்த்தால்தங்கம் என்பதற்கு ஒரு மதிப்பும் இல்லை. நிலத்திலிருக்கும் மண்ணிற்குள்ள மதிப்புத் தான் தங்கத்திற்கும். தங்கம் மனிதவாழ்க்கைக்கு அவசியமான வஸ்துவல்ல. உழைப்பாளிகள் செல்வத்தை உண்டுபண்ண விட்டால் உலகத்திலுள்ள முதலாளிகளின் பொக்கிஷங்களிலுள்ள தங்கத்தைக் கொண்டு எதைவாங்கமுடியும், என்னசெய்ய முடியும்? உழைப்பாளிகள் எல்லாம் உண்மையை உணர்ந்து ஒத்துக்கொண்டு தங்கத்தையும் அதற்கு சொந்தக்கார முதலாளிகளையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு உழைத்து பண்டமாற்றுச்செய்து தொழிலாளிகளுக்கு வாழமுடியும். ஆனால் உழைப்பாளிகளால் ஒதுக்கித்தள்ளப்பட்ட முதலாளிகளும், தங்கமும் சேர்ந்து எப்படிவாழ முடியும்? உழைப்பாளிபால் விளைந்த ஒருநேர உணவின் பெருமதியில்லை. உலக முதலாளிகளின் பொக்கிஷங்களிலுள்ள தங்கம் உலகத்திலுள்ள எல்லா உழைப்பாளிகளும் சேர்ந்து கொண்டு நாங்கள் சரீரப் பிரயாசைப்பட்டு உழைத்து உண்டுபண்ணிய-மனித வாழ்க்கைக்கு அவசியமான செல்வத்தை மனிதவாழ்க்கைக்கு அவசியமில்லாத—உபயோகிக்கமுடியாததங்கத்திற்குமாற்றிக்கொள்ளமாட்டோம், தங்கத்தைபசிக்குச் சாப்பிடமுடியாது, குளிருக்குபோர்த்திக்கொள்ள முடியாது, தங்குவதற்கு வீடாக்கிக் கொள்ள முடியாது, பிரயாணம் செய்வதற்கு ரயில் மோட்டார் கப்பல், ஆகாயவிமானமாக்கிக் கொள்ளமுடியாது. ஆகையால் பண்டமாற்றுத்தான் செய்வோம் என்று சொன்னால் உலகப் பொக்கிஷங்களிலுள்ள தங்கத்தையெல்லாம்குப்பைத் தொட்டியில்தான் போடவேண்டும். அல்லது தீ வைத்துக்கொளுத்த வேண்டியதுதான். உழைப்பாளிகள்விளைபொருள், செய்பொருள் முதலிய செல்வங்களை உண்டுபண்ணவிட்டால் தங்கத்தைக் கொண்டு முதலாளிகளின் மண்டையையா வாங்குவது? இப்பிரச்சினை சோஷியலிஸ்ட்டுகளுக்குத்தான் விளங்கும். இதை மிக விஸ்தீரணமாக விளக்கிக்காட்டினால் தான் தனியுடைமைக்கார முதலாளி நம்பிக்கை கொண்டவர்களுக்கும், மதத்தில் ஊறிக்கிடப்பவர்களுக்கும் தட்டுப்படும். ஆனால்அதற்கு இக்கட்டுரையில் இடம் போதாது.

முதலாளிகளின் வாழ்க்கை முறை.

அளவிற்கு மேற்பட்ட தாங்கமுடியாத கொடிய வறுமைக்குட்பட்ட பலகோடி மக்கள் வசிக்கும் ஐக்கியக் குடி அரசு அமெரிக்காவில் பணக்கார முதலாளிகள் சுவர்க்கலோக இன்பத்தை விட விசேஷமான இன்பத்தை அனுபவித்து வாழ்ந்து வருகிறார்கள். இப்பிரபுக்களின் ஊர்வினியோகமோ வர்ணிக்க முடியாதது.சமீபத்தில்ஒருபணக்காரபிரபுவினுடைய குமாரத்தியின் 21வது வருடம் பூர்த்தியாகியதை முன்னிட்டு செய்த வைபவத்திற்கு ஒரு லட்சம் டாலர் விரையம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றன! இன்னொரு குபேரனுடைய குமாரத்தியின் பிறந்ததினக் கொண்டாட்டத்திற்காக செய்தஜோடினைகளுக்கு 2500 டாலரும், ரோஜாப்பூ முதலியபூக்கள் வாங்குவதற்கு 10000 டாலரும் ஒவ்வொரு அழைப்புக்கடிதத்திற்கும் 5 டாலர் வீதமும் விரையம் செய்யப்பட்டனவாம்! இன்னொரு முதலாளி செத்தநாய் ஒன்றை புதைப்பதற்கு ஆயிரக்கணக்கான பவுன் செலவுசெய்துகல்லறை கட்டினானும். தெருத் தெருவாய் எத்தனையோ குழந்தைகள் காப்பாற்றுவாரற்று பிச்சை வாங்கிக்கொண்டு திரிந்து கடைசியில் சாக்கடையில் செத்து மடிந்து போவதை நாம் பார்த்திருக்கிறோம். இக்குழந்தைகளை எடுத்து ஒரு முதலாளியும் வளர்க்க மாட்டான். காட்டில் உள்ள நாயை பிடித்து வைத்துக்கொண்டு அதற்கு பவுன் பவுனாகசிலவு செய்து வளர்க்கிறான். ஒவ்வொரு முதலாளியும் நாய் வளர்ப்பதற்கு எவ்வளவு பணத்தை நாசப்படுத்துகிறான்!

கெபிடலிசம் அல்லது தனியுடைமைக்கொள்கை கொண்ட முதலாளித்துவ முறையின் தன்மை இத்தகையவைகள் தான். இத்தகைய அநீதமான முறையில் நடைபெற்று வருகிற பொருளாதாரத்தின் தன்மை இயற்கையல்ல. பலம் பெற்ற சுயநலம் பிடித்த மனிதர்கள் அவர்களின் பிரயோஜனத்திற்காக ஏற்படுத்திக்கொண்ட இயற்கைக்கு முரணான அநீதமானபொருளாதாரமுறையாகும். புத்தருக்கும், இயேசுவிற்கும்,முஹம்மதுவுக்கும், (குர்ஆனிற்கும்) இச்சத்தியங்கள் தட்டுப்படவில்லை. அவர்கள் எல்லாம், முதலாளித்துவமும, ஏழ்மையும் இயற்கையென எண்ணி அந்தப்படி மதங்களை ஏற்படுத்தினார்களே யன்றி சத்தியத்தை விசாரித்துணர்ந்து மதங்களை ஏற்படுத்தவில்லை.

உலகத்தில் உழைப்பாளிகளின் சோஷியலிஸ்ட் ஆட்சி ஏற்பட்டிருந்தால் உழைப்பால் விளைந்த அவ்வளவு செல்வங்களையும் தீயிட்டு எரித்து நாசப்படுத்த உழைப்பாளிகள் பிரியப்படுவார்களா; பிறந்ததினக் கொண்டாட்டங்களுக்கு இவ்வளவு செல்வத்தையும் நாசப்படுத்துவார்களா; பள்ளி, மசூதி, கோவில் சர்ச்,பன்சல, டாகெப கட்டுவதற்கு செல்வத்தை அள்ளி இறைப்பார்களா, ஹஜ்யாத்திரைக்கும், ரோமாபுரி யாத்திரைக்கும், காசி யாத்திரைக்கும் செல்வத்தை சிலவு செய்வார்களா? உலமாக்களுக்கும், போப்புக்களுக்கும், சங்கராச்சாரிகளுக்கும, ஹாமுதுருக்களுக்கும் செல்வத்தை வீணே அள்ளி அள்ளிக் கொடுப்பார்களா, யுத்தக் கப்பலுக்கும், வெடி குண்டுகளுக்கும், ஆயுதங்களுக்கும் செல்வத்தை நாசமாக்க உழைப்பாளிகள் விடுவார்களா? உழைப்பவனுக்கன்றோ உழைப்பின் கஷ்டம் தெரியும்! உழைப்பவனுக்கன்றோ செல்வத்தின் அருமையும, அதை பாதுகாக்கக் கூடிய முறையும் தெரியும். உழைக்காத முதலாளிகள் என்னும் வீணர் கூட்டம் உழைப்பாளிகளின் செல்வத்திற்கு சொந்தக்காரர்களாய் இருப்பதனால் அன்றோ இத்தியாதி முறையில் மனம் போன போக்கில் (உழைப்பாளிகளை அடிமைக்காளாக்கிவிட்டு) துர்விநியோகம் செய்கிறார்கள். உழைக்காத இச் சோம்பேறி முதலாளிக் கூட்டத்திற்கு உழைப்பின் கஷ்டம் தெரியுமா, செல்வத்தின் அருமை தெரியுமா? உலக செல்வத்தை உண்டுபண்ணும் உழைப்பாளிகள் அறியாமையில் மூழ்கி சத்தியத்தை உணர்ந்து கொள்ளாததினால் அன்றோ இந்தக் கொடுமை நிகழ்ந்து வருகின்றன. மூட மதங்கள் எல்லாம் உழைப்பாளிகளுக்கு "முதலாளித்துவமும் ஏழ்மையும் மாற்ற முடியாத இயற்கை" என்று கூறுகின்றன, உலக செல்வத்தை உண்டுபண்ணும் நமது உத்தம உழைப்பாளிகள் என்று இந்த முதலாளித்துவத்தின் கொடிய தன்மையையும், மதங்களின் புரட்டையும் உணர்ந்து அவைகளை ஒழிப்பதற்கு எதிர்த்துப் போராட ஒன்றாகத்திரண்டு முன் வருவார்களோ தெரியவில்லையே! இதற்குத் தான் இவ் வுத்தமர்களுக்குச் சத்தியத்தை விளக்கிக்காட்ட சோஷியலிஸ்டுகள்(சமதர்மிகள்)முன் வந்துள்ளார்கள். என தன்பான மனிதாபிமானங்கொண்ட சோஷியலிஸ்டுகளே! வீறுகொண்டெழுந்து முன் வாருங்கள். தோழர்களே! ஏழைத்தொழிலாளிகளுக்கு சமதர்ம உணர்ச்சியை ஊட்டுங்கள். தோழர்களே! சமதர்மிகளாகிய நீங்கள் அவர்களுக்குத் தலைமை வகித்து அவர்களின் உதவியைக் கொண்டு முதலாளித்துவத்தையும், மதங்களையும்ஒழிக்கத் தயாராகுங்கள் தோழர்களே! எழுங்கள்! எழுங்கள். தோழர்களே! சமதர்ம ஆட்சியை ஏற்படுத்த வீர உணர்ச்சியுடன் முன் வாருங்கள் தோழர்களே!

ஏஜண்டு தேவை.

திருச்சி பொன்மலையிலும், கோலார் தங்கவயலிலும் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்

"பகுத்தறிவு" ஈரோடு.

விதவையர் விடுதலை முழக்கம்.

இது விதவைகள்படும் கொடுமைகளையும், அவர்களின் விடுதலைக்குரிய வழிகளையும் விளக்கும் இனிய வர்ன மெட்டுகளாலமையப்பெற்றது. 1½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டில னுப்பப்படும். விலை அணா ½.

விலாசம்:—க. அ. புன்னைமுத்து, கல்லூரணி, அருப்புக்கோட்டை வழி.

சமதர்மக் கீதங்கள்.

இயற்றியது.
தோழர் ப. ஜீவானந்தம்
விலை பை. 6.

கிடைக்குமிடங்கள்:—

குடிஅரசு பதிப்பகம்
ஈரோடு.

சமதர்மக் காரியாலயம்.
ஜோலார்பேட்டை.

பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் கடலூர்சிறையில் இயற்றியது. விலை அணா 0—1—0.

கிடைக்குமிடங்கள்:—

குடி அரசு பதிப்பகம்,
ஈரோடு.

R. கிஸன்,
கோவை.

கொளும்பு.

இவ்விடத்தில் குடி அரசுப்பதிப்பக புஸ்தகங்களும், பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக புஸ்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்.

விலாசம்:—

K. N. S. Pillai,
News Agent 281, 2nd Div.
மருதானை, கொளும்பு.

ஏஜண்டு தேவை.

சென்னையில் நமது "பகுத்தறிவு" வாரப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்
"பகுத்தறிவு" ஈரோடு.

புதிய பத்திரிகை.

"சிறுவர் அறிவுக்கதிர்"
சீக்கிரம் வெளிவரும்.

பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு எல்லா வகைகளிலும் அறிவு புகட்டும் புதுமாதிரியான ஓர் மாதாந்தரப்பத்திரிகை.

வருஷ சந்தா உள்ளூர் 8 அணா.
" வெளியூர் 10 அணா.
தனிப்பிரதி 9 பை.

உடனே சந்தாதாராகுங்கள்
K. J. வேதமுத்து,
தமிழ்ப்பண்டிதர், L. M. போதனாமுறைப்பாடசாலை ஈரோடு.

மலையாளம் சில்க்.

2¼-வீதி. 5-நீளம் பட்டு 1-க்கு ரூ. 1-6
ஷை கம்பிக்கரை டஜன் 1-க்கு " 14-0
ஷை 4½-நீளம் டஜன் 1-க்கு " 10-0
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு " 3-8

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவிதாங்கூர்.

அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

—0—

நாகர் கோவிலிலிருந்து தோழர் பி. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு

"தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் " 2—0—0
3 மாதம் " 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவறாதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

கொடிய கர்ம வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள மன்னார்குடி

யானைக்கால் குஷ்டம்

ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்யுங்கள். ஏழைக்கு தர்ம வைத்தியம்.
யானைக்கால் குஷ்டத்திற்கு 40 வேளைக்கு தாம்பிர மெழுகு ரூ. 10
பல்வியாதிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா டெண்டல்பாம் பற்பொடி 2½ அணா

நீரழிவு.

நீர்க்கடுப்பு, வெள்ளை, வெட்டை, பவுந்திரம் முதலிய வியாதிகளுக்கு 120 புடம் போட்ட அப்ரேக் செந்தூரமும் மேகநாத நெய்யும் சாப்பிடுங்கள்.

இந்த மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான ரோகஸ்தர்கள் குணமடைந்து விட்டார்கள். நீரழிவுக்கு இதைப்போன்றதொரு குணமுள்ள மருந்து வேறெங்கும் கிடைக்காது. போலி மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டு மோசம் போகாதீர்கள்.

இதற்குப் பரீக்ஷை.

ஒரு மண்கலசத்தில் ஊசியினால் 7, 8 துவாரங்கள் போட்டு அது நிறையத் தண்ணீர் ஊற்றி அதில் நமது அப்ரேக் செந்தூரத்தைச் சிறிது போட்டால் தண்ணீரை ஒழுக விடாமல் நிறுத்திவிடும். இதைப்போலவே நீரழிவினால் அதிகமாகப்போகும் நீரை நிறுத்தியும், நீரில் சர்க்கரை இருந்தால் அதனை மாற்றியும், நீர்ப்பெருக்கு, நீர்க்கசிவு, பிரமியம், சொட்டு மூத்திரம், தந்திமேகம், நீடித்த வெள்ளை, இந்திரியம் நீருடன் போதல், பவுந்திரம் முதலிய வியாதிகளை அதிவிரைவில் குணப்படுத்துகின்றது. எவ்வளவு நாட்பட்ட கொடிய ரோகமாயிருந்த போதிலும் 24 நாள் வரை நமது செந்தூரத்தைச் சாப்பிட்டால் குணமடையலாம்.

24 நாள் மருந்து விலை ரூ. 15. 12 நாள் மருந்து விலை ரூ. 10. 3 நாள் மேகநாத நெய் ரூ. 5.

குறிப்பு:— சிலருக்கு நீரானது பசு மூத்திரம் போலும் கற்றாழஞ்சாற்றைப்போலும் சுண்ணாம்புத் தண்ணீர் போலும், பனங்கள்ளைப்போலும், நெய்யைப்போலும், தேனைப்போலும், கொழுப்பைப் போலவும் இறங்கும். காய்ச்சினால் அந்தந்த வாசனை கொடுக்கும். இப்படிப்பட்ட நோய்களெல்லாம் நிச்சயமாய் குணமாகின்றது. நம்பிக்கையுடன் மருந்தைத் தருவித்துச் சாப்பிடுங்கள். நம்பிக்கையற்றவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொண்டு போகலாம். மருந்துடன் சாப்பிடும் பத்திய பாகங்கள் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் 5 ரூபாய் அட்வான்சாய் அனுப்பி மருந்துக்கு ஆர்டர் செய்யவேண்டும்.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,
சித்தவைத்தியசாலை,
ஊத்துக்குளி ரோடு, திருப்பூர். (கோயமுத்தூர் ஜில்லா)

பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் K. M. பாலசுப்பிரமணியம் B.A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட்ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தோழர் S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும் உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வந்தபின் குடி அரசில் எழுதிய தலையங்கங்களையும், பல மகாநாடுகளில் பேசிய பேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

இது பாவ மன்னிப்பின் பேரால் நடந்து வந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி சேனிக்யூ அவர்கள் தம் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப் படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும், பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பங்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் தத்துவத்தையும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இந் நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை அணா 3.

"மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

இந்நூல் சென்னை தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் குடி அரசில் தொடர்ச்சியாக எழுதிவந்த கட்டுரைகளை தொகுத்ததாகும். இது, நோயும் கடவுள் சக்தியும், மந்திரத்தால் நோய் தீருமா? மதங்களால் ஏதேனும் பயன் உண்டா?, மூட நம்பிக்கையின் கொடுமை என்பனபோன்ற பல அரிய விஷயங்களைக்கொண்ட சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

இரண்டாம்பாகம்

சுமார் 116 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

நான் நாஸ்திகன் ஏன்?

(பகத்சிங் எழுதியது.)

இப் புத்தகமானது தோழர் பகத்சிங், அவர்கள் தான் எவ்வாறு நாஸ்திகரானார் என்பது பற்றியும், ஏன் நாஸ்திகரானார் என்பது பற்றியும் லாகூர் சதிவழக்கு விசாரணைக்காலத்தில் சிறையிலிருக்கும்போது எழுதியதாகும். அருமையான கருத்துக்களும் தெளிவான உதாரணங்களும் கொண்டது. விலை அணா 3.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம், லிமிட்டெட், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)
விலை அணா 8.

லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கைவீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.
விலை அணா 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.
விலை அணா 8.

இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.
அயோத்தியாகாண்டம் அணா 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.
விலை அணா 2.

பர்னாட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னாட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.
விலை அணா ½.

மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

சோதிடப் புரட்டு

விலை அணா 2.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா ½.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.